## ஊழியர் சேமலாப நிதியம்

# ஆண்டறிக்கை

# 2024

இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களின் மிகப்பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கும் ஊழியர் சேமலாப நிதியமானது 2024இல் ரூ.4.4 ரில்லியனாக விளங்கி, அதன் சொத்துத் தளத்தினைத் தொடர்ந்தும் வளர்ச்சியுறச் செய்து, அதன் உறுப்பினர்களுக்கான நியாயமான வருவாய் வீதத்தையும் நிதியத்தின் பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தி வருகின்றது. ஊழியர் சேமலாப நிதியமானது 2024இல் ரூ.514 பில்லியன் வருவாயினை ஈட்டியதன் மூலம் அதன் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளை வெற்றிகரமாக வழிநடாத்தியிருக்கின்றது. நடைமுறையிலுள்ள பொருளாதார மீட்சியின் பின்னணியில், 2024ஆம் ஆண்டில், ஊழியர் சேமலாப நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு 11.00 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வருவாய் வீதமொன்றைப் பிரகடனப்படுத்தக் கூடியதாக இருந்தது.

ஆண்டுகாலப் பகுதியில், ஊழியர் சேமலாப நிதியம் உயர்ந்தளவான நியமத்துடன், ஆர்வலர்கள், பிரதானமாக உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கான அதன் பணிகளைத் தொடர்ந்தும் வழங்கியது. காகிதங்களற்ற சூழலொன்றில் தொழிற்பாட்டு செயற்றிறனை மேம்படுத்துவதற்கு, ஊழியர் சேமலாப நிதியமானது அதன் நடவடிக்கைகளை டிஜிட்டல் நிலைமாற்றத்திற்கு தொடர்ந்தும் ஈடுபடுத்தி, ஊ.சே.நிதிய இணையவழி சேவைகளை ஊக்குவிக்கின்றது.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பின்பற்றி, 2024.12.31 அன்று முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்களின் பிரதிகள் தொழில் மற்றும் நிதி அமைச்சர்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளதுடன் 11.00 சதவீதம் கொண்ட ஆண்டு வட்டி வீதத்திற்காக குறிப்பிட்ட இரு அமைச்சர்களின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

# உள்ளடக்கம்

பிரிவு அ


**பிரிவு அ - கூட்டாண்மை நிர்வாகம்**

| | |
|---|---|
| ஆளுநர் மற்றும் ஆளுகைச் சபையின் தலைவரிடமிருந்தான செய்தி | 105 |
| தொழில் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான செய்தி | 107 |
| மூத்த முகாமைத்துவக் குழு | 108 |
| ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு | 111 |
| இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் | 112 |
| தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள் | 113 |


பிரிவு ஆ


**பிரிவு ஆ - கூட்டாண்மை பொதுநோக்கு**

| | |
|---|---|
| பயணத்தின் மைல்கற்கள் | 116-117 |
| தொலைநோக்கு மற்றும் பணி | 118 |
| நிதியியலின் முக்கிய அம்சங்கள் - 2024 | 119 |
| தொழிற்பாட்டின் முக்கிய அம்சங்கள் - 2024 | 123 |
| ஊ.சே.நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2024 | 125 |


பிரிவு இ


**பிரிவு இ - நிதியியல் கூற்றுக்கள்**

| | |
|---|---|
| வருமானம் மற்றும் செலவினக் கூற்று | 138 |
| நிதியியல் நிலைமைக் கூற்று | 139 |
| பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு | 140 |
| முதலீடுகளின் கூற்று | 141 |
| காசுப்பாய்ச்சல்கள் கூற்று | 142 |
| உறுப்பினர் செல்வத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று | 143 |
| நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் | 144 |


பிரிவு ஈ


**பிரிவு ஈ - கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை** **197**


பிரிவு உ


**பிரிவு உ - புள்ளிவிபரவியல் பின்னிணைப்பு மற்றும் துணைநிரப்புத் தகவல்கள்**

| | |
|---|---|
| முதலீடுகள், முதிர்ச்சிகள் மற்றும் முதலீடுகள் மீதான வருவாய் (1995 - 2024) | 327 |
| உறுப்பினர் நிலுவைகள் மீதான வருவாய் வீதங்கள் (1995 - 2024) | 328 |
| உறுப்பினர் நிலுவைகள், உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி மற்றும் உறுப்பினர் நிலுவைகள் மீதான பயனுறு வீதம் (1995 - 2024) | 329 |
| | 330 |
| முதலீட்டுச் சொத்துப்பட்டியல் கூற்று (1995 - 2024) | 331 |
| தொகுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று - ஊ.சே.நி. திணைக்களம், இலங்கை மத்திய வங்கி (1995 - 2024) | 332 |
| தொகுக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினக் கணக்கு (2000 - 2024) | 336 |


பிரிவு அ
கூட்டாண்மை
நிர்வாகம்





## ஆளுநர் மற்றும் ஆளுகைச் சபையின் தலைவரிடமிருந்தான செய்தி

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையின் சார்பில், 2024ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கைக்கு இச்செய்தியை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்களின் நீண்டகால நிதியியல் நலனோன்புகையை பாதுகாப்பதற்கான நிதியத்தின் அர்ப்பணிப்பிற்கமைவாக, 2024 இறுதியிலுள்ளவாறு உறுப்பினர் நிலுவைகள் மீதான 11 சதவீதம் கொண்ட வருவாயொன்றைப் ஊ.சே.நிதியம் பிரகடனப்படுத்தியுள்ளது என்பதை நான் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். நிதியத்தின் தொடர்ச்சியான தாக்குப்பிடிக்கும் தன்மையையும் மூலோபாய வளர்ச்சியையும் பிரதிபலிக்கும் விதத்தில், ஊ.சே.நிதியத்தின் மூலதனச் சொத்துப்பட்டியல் 2024இல் 4.4 றில்லியனிற்கு விரிவடைந்து 12.7 சதவீத அதிகரிப்பொன்றை உருவாக்கியது. இந்த ஆண்டில், தீவிரமான இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளினால் வழிநடத்தப்பட்ட ஊ.சே. நிதியத்தின் முன்மதியுடைய முதலீட்டு மூலோபாயங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுபேற்றின் மூலம், நிதியமானது அதன் ஒட்டுமொத்த சொத்துப்பட்டியல் மீதான வலுவான வருவாயொன்றை அடைந்திருந்தது. நிலைபெறத்தக்கதும் சீரானதுமான வருவாய்களை வழங்குவதற்கு ஊ.சே.நிதியம் அதன் செயற்பணி தொடர்பில் கவனத்தைசெலுத்தியுள்ள அதேவேளை முன்மதியுடைய, வெளிப்படைத்தன்மையவாய்ந்த மற்றும் ஒருமைப்பாடுமிக்க அதன் முக்கிய விழுமியங்களை நிலைநிறுத்தியுள்ளது.

ஆண்டு காலப்பகுதியில், தொழில்தருநர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்புக்கள் ரூ.234.4 பில்லியனை அடைந்து, ஆண்டுகளுக்கு மேலாக ஒத்திசைவான மேல்நோக்கிய போக்கினை எடுத்துக்காட்டியன. உறுப்பினர்களுக்கு அல்லது அவர்களின் சட்டரீதியிலான வாரிசுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட மீள்நிதியிடல் தொகை ரூ.188.1 பில்லியனாக விளங்கியது. இதற்கு மேலதிகமாக, ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதன் உறுப்பினர்களுக்கு பணியை வழங்குவதில் உயர்ந்தளவான நியமங்களைத் தொடர்ந்தும் நிலைநிறுத்துகின்ற அதேவேளை டிஜிட்டல் நிலைமாற்றத்திற்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது. 'கையேட்டுச் செயன்முறையைப் படிப்படியாக நீக்கியதன் மூலம் ஊ.சே.நிதிய இணையவழி சேவை' தொடர்பான வெற்றிகரமான விரிவாக்கம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. ஆவண முகாமைத்துவ முறைமையை மேம்படுத்தியதும் அனர்த்த மீட்பு ஒருங்கேற்பாடுகளைத் தொடங்கியதும் ஊ.சே. நிதியத்தின் டிஜிட்டல் நிலைமாற்றத்திற்கான நிகழ்ச்சிநிரலினை மேலும் மேம்படுத்தின. தொழிற்பாட்டுச் செயற்றிறன், வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை மேம்படுத்தும் அதேவேளை அனைத்து ஊ.சே.நிதிய ஆர்வலர்களின் தேவைகளையும் முழுமையாக நிவர்த்திசெய்வதை இலக்காகக் கொண்டு, அனைத்தையுமுள்ளடக்கிய தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப தீர்வுகள் தொடர்பான செயற்றிட்டம் தொழில் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்று வருகின்றது.

ஊ.சே.நிதிய நடவடிக்கைகளை டிஜிட்டல் தளங்களுக்கு மாற்றல் செய்வதை வசதிப் படுத்தவற்கான விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களின் மூலம் தொழில்தருநர்களுடனும் உறுப்பினர்களுடனும் ஊ.சே.நிதியம் தொடர்ந்தும் தொடர்பினை மேற்கொண்டு வருகின்றது. தொழில் திணைக்களத்துடன் கூட்டிணைந்து, ஊ.சே.நிதியத் திணைக்களமானது ஆண்டு முழுவதும் பல்வேறு நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்களையும் நடாத்தி, உறுப்பினர்களின் தொழில்புரியும் இடங்களில் அல்லது அவர்களின் அவர்கள்

தமிழ்

வசிக்கும் நகர் பகுதிகளுக்கு சேவைகளை கொண்டுசேர்த்துள்ளது. 2024இல், அத்தகைய எட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் பல்வேறு பிராந்தியங்களில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

ஊ.சே.நிதியத் திணைக்களத்தினதும் தொழில் திணைக்களத்தினதும் ஊழியர்களின் அர்ப்பணிப்பிற்கும் கூட்டிணைந்து செயற்பட்டமைக்கும் எனது மனமார்ந்த நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். ஊ.சே.நிதியம் தாக்குப்பிடிக்கும்தன்மையுடனும், பதிலிறுப்பாளராகவும் இருப்பதுடன் நிதியத்தின் நிதியியல் பாதுகாப்பின் தூணாக அதன் நம்பிக்கையைத் தொடர்ந்தும் ஏற்படுத்தியுள்ள நிதியத்தின் உறுப்பினர்களின் தோற்றம்பெற்றுவரும் தேவைகளுடனும் அணி சேர்ந்துள்ளதை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி முழுமையான ஈடுபாட்டினைக் கொண்டுள்ளது.

புத்துணர்ச்சியூட்டும் நம்பிக்கையினை எதிர்பார்த்து, அனைத்து ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பானதும் சுபீட்சமிக்கதுமான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு உறுதி பூண்டுள்ளோம். வருகின்ற காலங்களில் வெற்றிகரமானதும், வலிமையானதும், நிதியியல் சார்ந்த நலனோன்புகையுடனும் தொடர்ந்தும் செயற்படுவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க**

ஆளுகைச் சபையின் தலைவரும்/

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்

தமிழ்



## தொழில் ஆணையாளர் நாயகத்திடமிருந்தான செய்தி

தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களின் ஓய்வூகாலத்தைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் தொழிற்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிகை 2024இற்காக இச்செய்தியை வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் ஊழியர் சேமலாப நிதியம் தாபிக்கப்பட்டு, நிதியத்தின் உறுப்பினர்களுக்கு சமூக பாதுகாப்பினை உறுப்படுத்தும் வகையில் தொடர்ச்சியான வளர்ச்சியினை எட்டியுள்ளது என்பது மிகவும் பெருமிதத்திற்குரிய விடயமாகும்.

2020 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் நிலவிய கொவிட் உலகளாவிய நோய்த்தொற்று அதேபோன்று பொருளாதார நெருக்கடி போன்றன காரணமாக சீர்குலைந்திருந்த வியாபாரங்களை மீளக்கட்டியெழுப்பிய ஆண்டாக விளங்கியமையினால், 2024ஆம் ஆண்டு பல்வேறு சவால்களை எதிர்கொண்ட ஆண்டாக காணப்பட்டது. தொழில் திணைக்களமானது தொழில்தருநர்களுக்கும் ஊழியர்களுக்கும் செயற்றிறன்மிக்க பணிகளை வழங்குவதற்கு பொறுப்புடையதாக காணப்படுகின்ற அதேவேளை நிறுவனங்களை∴வியாபாரங்களை முடிவுறுத்தல், தொழில் வாய்ப்புக்களை இழத்தல், பயிற்றுவிக்கப்பட்ட/தேர்ச்சிபெற்ற ஊழியர்கள் புலம்பெயர்தல் மற்றும் தொழில்முயற்சியாளர்கள் தொடர்பில் கடன்களின் மிதமிஞ்சிய சுமை போன்ற இடர்நேர்வுகளுக்கு மத்தியில் ஊழியர்களின் உரிமைகளையும் பாதுகாக்கின்றது. இறுதியாக, ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதற்கு எம்மால் இயலுமாகவிருந்தது.

புதிய ஒழுங்குமுறைப்படுத்தலை அறிமுகப்படுத்தியதுடன் உறுப்பினர்களை அவற்றின் தேவைப்பாட்டிலிருந்து 30 நாட்களினுள் நாம் பதிவுசெய்வதற்கு முயற்சித்துள்ள அதேவேளை முன்னர் 50 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஊழியர் சேமலாப நிதிய உறுப்பினர்கள் நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நேரத்திலும் கூட தொழில் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படவில்லை. இதன்படி, இன்னமும் பதிவுசெய்யப்படாத அனைத்து உறுப்பினர்களையும் அடுத்த ஆண்டினுள் பதிவுசெய்வதற்கான இலக்குடன் நாம் செயற்பட்டுவருகின்றோம்.

பிராந்திய தொழில் அலுவலர்கள் 80, 296 காலமுறையான கண்காணிப்புக்களை முன்னெடுத்துள்ளதுடன் ரூ.7.2 பில்லியன் கொண்ட, செலுத்தத்தவறிய ஊ.சே.நிதிய பங்களிப்புக்கள் மற்றும் மேலதிகக் கட்டணங்களை கண்காணித்து அறவிடுவதற்கான நடைமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேலும், உரிய பங்களிப்புகளை செலுத்தாத ஊழியர்கள் மீது 2206 வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்பதுடன் அவ்வாறு அறவீடுசெய்யப்பட்ட தொகை ரூ.2,105,410,468.45 ஆகும். அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக நடமாடும் சேவை நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் 3129 உறுப்பினர் கணக்குகளைத் திருத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இப்பணிகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு தங்களை அர்ப்பணித்துக் கொண்ட தொழில் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளடங்கலாக ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் அனைத்து அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எச்.கே.கே.ஏ. ஜயசுந்தர**

தொழில் ஆணையாளர் நாயகம்

# மூத்த முகாமைத்துவக் குழு

## 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறு

### இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம்

| பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|
| | கண்காணிப்பாளர் | திரு. டி எல் நிகால் |
| | மேலதிகக் கண்காணிப்பாளர் | திருமதி எஸ் எம் எல் சிறிவர்த்தன |
| | மேலதிகக் கண்காணிப்பாளர் | திருமதி. ஆர் எம் டி சி எம் ராஜபக்ஷ |
| | பிரதிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி பி ஏ என் டி பெரேரா |
| | பிரதிக் கண்காணிப்பாளர் | திரு. டபள்யு எச் எம் குமார |
| | பிரதிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே ஏ ரி என் சேனரத்ன |
| | பிரதிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஆர் ஏ சி சி ரூபசிங்க |
| கூட்டாண்மைப் பணிகள் மற்றும் நிர்வாகப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு எஸ் எச் குமாரசேன |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே ஏ எஸ் ஏ குருபாராய்ச்சி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபள்யு எம் ஏ பிரபாஷினி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபள்யு பி டி என் பொன்சேகா |
| சேகரிப்புப் பிரிவு | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. கே ஏ டி எச் ஏ ராஜரத்ன |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | செல்வி. ஆர் எஸ் எம் ஆர் ரத்நாயக்க |
| நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி ஆர் எம் மென்டிஸ் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எஸ் ஐ ஏ வலவகே |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே பி எம் சத்துரிக்கா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எம் ஏ வி விஜேன்ரணி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எம் ஜி ஐ சி விஜேவர்தன |
| மீள்பதிவுப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எம் டபள்யு என் மன்னநாயக்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எம் டபள்யு டி டில்ஷானி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே டி டி எஸ் சில்வா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஏ கே என் விக்ரமதிலக்க |
| இ-சேகரிப்புப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஜி பி எம் பி திசாநயக்க |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. பீ எம் ஜே விஜேயசுந்தர |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எல் வி எம் என் அர்சகுலரத்ன |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எச் டி என் நிமேஷிக்கா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஏ எம் எச் எஸ் அபேகோன் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி எம் கே கே குணரத்ன |

| | | |
|---|---|---|
| நிதிய முகாமைத்துவப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எல் பி எஸ் பெரேரா |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. கே யு பீ தென்னக்கோன் |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி எல் டி எஸ் ஆர் குணசேகர |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி. டி பி உடுகமகோறள |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு ஏ ஏ எஸ் சுமனதாச |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டபிள்யு ஏ டபிள்யு என் வன்னியாராய்ச்சி |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஈ ஏ சி எம் எதிரிசிங்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி. கே வி டி சக்குனிகா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. இ எம் ஜி பி ஏக்கநாயக்க |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | திரு. எஸ் எஸ் என் எஸ் மென்டிஸ் |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | திருமதி. ஏ ஏ டி எம் தேஷானி |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | திருமதி. டி எம் பி எல் திசாநாயக்க |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | திருமதி. எம் ஜி எஸ் டி மசலகெதர |
| கணக்குகள் மற்றும் மீளிணக்கப்படுத்தல் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எம் திசாநாயக்க |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபிள்யு ஏ என் டி டயஸ் |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. ஏ கே சத்துரங்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஆர் கே எம் பிரதிபானி |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | செல்வி. வை ஆர் ஹர்ஷனி |
| பதிவேட்டுகள் முகாமைத்துவப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டி வை எஸ் மகாஹெதரவத்த |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. டி டி டீ பீரிஸ் |
| | உதவிக் கண்காணிப்பாளர் | செல்வி. டபள்யு எம் எஸ் வீரகொடி |
| பதிவேட்டுத் திருத்தங்கள் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திரு. எஸ் ஜி சி சமரநாயக்க |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. வை ஏ ஜே என் யாப்பா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திரு. என் கஜீபன் |
| | முகாமைத்துவப் பயிற்சியாளர் | செல்வி. கே யு டி ஜே ஷமல்க்கா |
| வீடமைப்புக் கடன் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. எஸ் எஸ் வெனிவெல்கொல |
| மீளளிப்புக் கட்டுப்பாட்டுப் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே எம் ஜி சி பண்டார ஜநாயக்கே |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. பீ ஏ என் கருணாரத்ன |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் பிரிவு | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. டபிள்யு எல் பி ஜே லெகமல்லகே |
| | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | ஜி. ஜி. என். எம். பெரேரா |
| | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. ஏ டபள்யு எல் லஹிருனி |
| பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள் பீடம் மற்றும் அழைப்பு நிலையம் | உதவிக் கண்காணிப்பாளர் | திருமதி. கே எச் குணசேகர |

## தொழில் திணைக்களத்தின் ஊ.சே.நிதியப் பிரிவு

| பிரிவு | பதவி | பெயர் |
|---|---|---|
| | தொழில் ஆணையாளர் | திருமதி. ஏ.எம்.ஜி.என்.டி. சுமணசேன |
| கோரல் | துணைத் தொழில் ஆணையாளர் | திருமதி. ரி எம் ஐ லக்மாலி |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திரு. டி.எம்.ஜே. பண்டார |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திரு. டி.எல் தயாநந்த |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. டபள்யு. கே. கே. எஸ். தயரத்ன |
| அறவிடல் | துணைத் தொழில் ஆணையாளர் | திரு. எச்.பி.டி.என்.கே.ஜயசேகர |
| | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. பி.வி.எம்.என். ரணதுங்க |
| | உதவித் தொழில் ஆணையாளர் | செல்வி. ஏ.எச்.எல். ரூபிக்கா பத்மினி |
| 30% கோரல் | உதவித் தொழில் ஆணையாளர் | திரு. பி.ஜி.ஆர். சந்திரவன்ச |
| நிர்வாகம் | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. டபள்யு. டி. பி. எஸ். வல்பிட |
| மத்திய கோப்பிடல் பிரிவு | உதவித் தொழில் ஆணையாளர் | திரு. டி. லக்சுமிதரன் |
| இறந்த உறுப்பினர்களின் கோரல் | உதவித் தொழில் ஆணையாளர் | திருமதி. டி.எம்.டி.பி. தசநாயக்க |

# ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் (சட்டம்) நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி./ நிதியம்), ஓய்வூதிய நன்மைகளுக்கு உரித்தற்ற தனியார் துறை மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வுகால திட்டமொன்றாக விளங்குகின்றது. சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளுக்கமைவாக, தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொதுவான நிருவாகியாக செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராக செயற்படுவதற்கான அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஊ.சே. நிதியச் சட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதன் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு வசதியளிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி ஊழியர் சேமலாப நிதியத்தை தாபித்துள்ளது.

நிதியத்தின் உறுப்பினர்களுக்கான குறைந்தபட்ச கட்டாயப் பங்களிப்பு வீதம் அவர்களின் மொத்த மாதாந்த வருமானத்தில் 20 சதவீதமாக இருக்கும். தொழில்தருநர்களும் ஊழியர்களும் (உறுப்பினர்கள்) ஊ.சே. நிதியத்திற்கு உறுப்பினரின் மாதாந்த மொத்த வருவாயில் குறைந்தபட்சம் முறையே 12 சதவீதத்தினையும் 8 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர். சட்டத்தின் ஏற்பாடுகள் நியதிகளின்படி தொழில்தருநர்கள் அவர்களுடைய ஊழியர்களுக்கான ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்துவதற்கு பொறுப்புடையவர்களாவர்.

ஊ.சே.நிதிய உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வூதிய வயதினை அடைந்ததும் அதாவது பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினை அடைந்ததும் அவர்களது ஓய்வுகால நன்மைகளை (பங்களிப்புக்கள் மற்றும் வட்டி) கோருவதற்கு தகுதியுடையவர்களாகவர். மேலும், உறுப்பினர்கள் தமது ஊ.சே.நிதியக் கணக்குகளிலுள்ள நிதிகளை புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக பெண் உறுப்பினர்கள் தொழிலைவிட்டு விலகுதல் மற்றும் ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற சந்தர்ப்பங்களில் நிதியினை மீளபெறத் தகுதியுடையவர்களாவர். மேலும், உறுப்பினரொருவர் மரணமடையும் சந்தர்ப்பத்தில் இறந்த உறுப்பினர்களின் சட்ட ரீதியான வாரிசுகள் நன்மைகளைப் பெறுவதற்கு தகுதியுடையவர்களாவர். ஓய்வுகால நன்மைகளுக்குப் புறம்பாக, ஊ.சே. நிதிய உறுப்பினர்கள் வீடமைப்பு நோக்கங்களுக்காக உறுப்பினர் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டுள்ள நிலுவைகளைப் பிணையாக வைத்து ஒப்புதலளிக்கப்பட்ட ஐந்து கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து கடன்களைப் பெற்றுக்கொள்ள ஊ.சே. நிதியம் வசதியளிக்கின்றது. மேலும், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே. நிதிய (திருத்தச்) சட்டத்தில் வழங்கப்பட்டவாறு 10 ஆண்டுகளுக்கும் கூடுதலாகப் பணிபுரிந்து ரூ.300,000 இற்கும் கூடுதலான தொகையினை ஊ.சே.நிதியத்தின் நிலுவைக் கணக்கில் வைத்திருக்கும் உறுப்பினர்கள் 2015 இலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் வீடமைப்பு நிருமாண நோக்கங்களுக்காக அல்லது மருத்துவ சிகிச்சைக்காக உயர்ந்தபட்சம் ரூ.2 மில்லியன் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களது கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதம் வரையான தொகையினை மீளப்பெற உரித்துடையவர்களாவர்.

தமிழ்

## இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத்தின் தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்புக்கள், மேலதிக விதிப்புக்கள், கட்டணங்கள் மற்றும் நிதியத்தின் பண முதலீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் என்பவற்றைப் பெற்றுக்கொண்டு நிதியத்திற்கு அத்தொகைகளை வரவு வைத்தல்.

தனிப்பட்ட உறுப்பினர் கணக்குகளைப் பேணுதலும் உறுப்பினர்களுக்கான தனிப்பட்ட கணக்குகளின் வருடாந்த அறிக்கைகளை வழங்குதலும்.

நிதியத்தின் பாதுகாப்பை உறுதிசெய்கின்ற அதேவேளை பொருத்தமானதாக கருதப்பட்டவாறு ஊ.சே.நிதியச் சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாக வேண்டப்படாத நிதியங்களை பிணையங்களில் முதலீடுசெய்தல்.

தொழில் அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் ஆளுகைச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வீதமொன்றில் உறுப்பினர் கணக்குகளுக்கு ஆண்டு வட்டியை வரவு வைத்தல்.

பொதுக் கணக்குகளைப் பேணுதல் மற்றும் ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.

வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்கு வசதியளிக்கும் விதத்தில் தொடர்பான கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு வரவு மீதிகள் தொடர்பான சான்றிதழ்களையும் நிலுவை உறுதிப்படுத்தல் போன்ற ஏனைய சேவைகளையும் வழங்குதல்.

ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலிருந்து 3 மாதங்களுக்குள் தொழில் அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களைச் சமர்ப்பித்தல்.

உறுப்பினர் கணக்குகளிலுள்ள பெயர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு மீளப்பதிவு செய்தல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதங்களிற்கிணங்க 30 சதவீத மீளளிப்புக்களை மேற்கொள்ளுதல்.

தொழில்தருநர்கள் தவறான விபரங்களை வழங்கியதன் காரணமாக ஏற்படும் உறுப்பினர் கணக்குகளிலுள்ள குறைபாடுகளை சரிசெய்தல்

## தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தினை நடைமுறைப்படுத்தல். இதற்கமைவாக,

- ஊழியர் சேமலாப நிதியத்தில் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.
- ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களைப் பதிவுசெய்தல்.
- தொழில்தருநர்களிடமிருந்து செலுத்தத்தவறிய கொடுப்பனவுகளை அறவிட்டுக் கொள்ளுதல்
- உறுப்பினர்களுக்கு நன்மை கொடுப்பனவிற்கான தீர்மானக் கடிதத்தை வழங்குதல்
- ஒப்புதலளிக்கப்பட்ட சேமலாப நிதியங்களை மேற்பார்வை செய்தல்
- ஊழியர் சேமலாப நிதியத்தின் முன்னேற்றத்திற்கான கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படுகிறார்களா என்பதனை உறுதிப்படுத்துவதற்கு களப் பரிசோதனைகள் மற்றும் விசாரணைகளை நடாத்துதல்
- ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புக்கள் செலுத்தப்படாமை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் நடவடிக்கைகளை எடுத்தல்
- ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செயற்படாத தொழில்தருநர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்தல்
- பிந்திய பங்களிப்புக்களுக்கான தண்டப் பணங்களை அறவிடல்
- ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்கள் உள்ளடங்கலாக பொதுமக்களுக்கு மத்தியில் ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநர்கள் உள்ளடங்கலாக நிதியத்தின் பல்வேறு பங்குத்தாரர்களுக்கு தடையற்ற சேவைகளை வழங்கும் பொருட்டு, ஊ.சே. நிதியத் திணைக்களம் அதன் முறைமைகளையும் உட்கட்டமைப்பையும் மேம்படுத்தியுள்ளது.



## பிரிவு ஆ

# கூட்டாண்மை பொதுநோக்கு



# பயணத்தின் மைல்கற்கள்

**1958**

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் இயற்றப்பட்டது

நிதியத்திற்கான ஊ.சே.நிதியப் பங்களிப்பு வீதமாக ஊழியர்களினால் 4 சதவீதமும் தொழில்தருநர்களினால் 6 சதவீதமும் செலுத்தப்பட்டது

**1971**

ஊ.சே. நிதியத்திற்கான பங்களிப்பு வீதம் ஊழியர்களைப் பொறுத்தவரை 4 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கும் தொழில்தருநர்களைப் பொறுத்தவரை 6 சதவீதத்திலிருந்து 9 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது

**1981**

ஊ.சே.நிதியப் பங்களிப்பு வீதம் ஊழியர்களைப் பொறுத்தவரை 8 சதவீதத்திற்கும் தொழில்தருநர்களைப் பொறுத்தவரை 12 சதவீதத்திற்கும் அதிகரிக்கப்பட்டது

**1988**

ஊழியர்கள் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்பு கடனைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் உறுப்பினர்கள் தமது ஊ.சே.நிதியத்தினைப் பிணையாக வைப்பதற்கான வசதியளிக்கப்பட்டது

**1996**

இலங்கை மத்திய வங்கி தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பினைத் தொடர்ந்து ஊ.சே. நிதியத்தில் ஏஎஸ் 400 கணனி முறைமை நடைமுறைக்கிடப்பட்டது

**1998**

நாட்டின் 50ஆவது சுதந்திரதின ஆண்டு நிறைவினைக் குறிக்குமுகமாக பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கண்காட்சியில் முதற்றடவையாக “உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்கள்” வழங்கப்பட்டன

**1999**

ஊ.சே.நிதிய மீளளிப்பு தன்னியக்கப்படுத்தலுக்கு அதிகாரமளித்தல் செய்முறை

**1999**

தொழில் திணைக்களத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் தொடர்பூட்டல் இணைப்பு நிறுவப்பட்டது

தீர்மானக் கடிதங்களை இலத்திரனியல் ரீதியாக மாற்றல் செய்வது முன்னெடுக்கப்பட்டது

மாவட்ட தொழில் அலுவலகங்களை இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களத்துடன் இணைக்கும் வேலைகள் கண்டி தொழில் திணைக்களத்தினை இணைத்ததன் மூலம் ஆரம்பமாயிற்று

**2000**

ஊ.சே.நிதியக் கோரல் செய்முறையினை விரைவுபடுத்துவதற்காக புதிய கணனி முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது

**2000**

அரையாண்டு உறுப்பினர் நிலுவைக் கூற்றுக்களின் வழங்கல் ஆரம்பமானது

**2001**

ஊ.சே.நிதியக் கொடுப்பனவுச் செய்முறை மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குப் பன்முகப்படுத்தப்பட்டது

**2002**

இலத்திரனியல் மூலமாக பங்களிப்புக்களைச் சேகரிப்பது முன்னெடுக்கப்பட்டது

# தொழில் திணைக்களம்



**2006**

பொதுப் பேரேடு, முதலீடு மற்றும் இருப்பு மாதிரிகளுடன் சப் ஈசிசி5 நடைமுறைப்படுத்தப்ப

**2007**

ஊ.சே.நிதிய அலுவல்சார் வெப்தளம் மூன்று மொழிகளிலும் ஆரம்பிக்கப்பட்டது

**2008**

உறுப்பினர்களை மீளப் பதிவுசெய்தல் ஆரம்பிக்கப்பட்டது

நாட்டின் 60ஆவது சுதந்திர ஆண்டு நிறைவினைக் குறிக்கு முகமாக உறுப்பினர் நிலுவைகளையும் தகவல்களையும்

**2011**

மத்திய, இரட்டைப் பதிவு பேரேட்டு முறைமைகளுடன் உறுப்பினர் பொறுப்பு முறைமையின் மீள்பொறியியற்படுத்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடாக ஊ.சே.நிதியக் கணனி வழி அதேநேரக்

ஊ.சே.நிதியத்தின் பெறுமதி ரூ.1 நில்லியன் மட்டத்தினை அடைந்தது

**2012**

ஊ.சே.நிதியச் சட்டம் திருத்தப்பட்டதுடன், 2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊ.சே.நிதிய (திருத்தச்) சட்டத்தின் பிரிவு இல.23அ சேர்க்கப்பட்டது

**2012**

இலத்திரனியல் ஊடகமூடாக ஊ.சே.நிதிய விபரங்களை வழங்குவது கட்டாயமாக்கப்பட்டது

**2013**

செலுத்தத் தவறிய கொடுப்பனவுகளையும் நீதிமன்ற வழக்குகளையும் கண்காணிப்பதற்காக புதிய கணனி மயப்படுத்தப்பட்ட முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது

**2015**

ஊ.சே.நிதிய 30 சதவீதக் கோரல் செய்முறை நிறுவப்பட்டது

**2015**

வீடமைப்பு மற்றும் மருத்துவ நோக்கங்களுக்காக 30 சதவீதம் கொண்ட ஓய்விற்கு முன்னரான மீளளிப்பு முன்னெடுக்கப்பட்டது

இ-பதிவேட்டு அறை நடைமுறைப்படுத்தப்பட்டது

**2016**

கணனிவழி அதேநேர உறுப்பினர் தகவல் சரிபார்ப்பு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது 100 சதவீதம் தன்னியக்கச் செய்முறையினையும் உறுப்பினர் கணக்குகளின் அதேநேர இற்றைப்படுத்தலையும் கொண்டு வந்தது

**2017**

மக்கள் வங்கியுடன் பங்களிப்புச் சேகரிப்புக்கள் நாடளாவிய ரீதியில் பன்முகப்படுத்தப்பட்டன

ஊ.சே.நிதியத்தின் பெறுமதி ரூ.2 நில்லியன் மட்டத்தினை அடைந்தது

**2021**

ஊ.சே நிதியத்தின் பெறுமதி ரூ. 3 நில்லியன் மட்டத்தை அடைந்தது.

இணையவழி பங்களிப்பு தளமொன்றுடன் ஊ.சே.நிதியத்தின் அலுவல்சாா வெப்தளத்தை மீளத்தொடங்குதல்

**2023**

ஆளுகைச் சபை சொத்துப்பட்டியலை மறுசீரமைத்தல்

**2024**

ஊ.சே நிதியத்தின் பெறுமதி ரூ. 4 நில்லியன் மட்டத்தை அடைந்தது.

## உமது தொலைநோக்கு



“எமது உறுப்பினர்கள் ஒரு நிறைந்த ஓய்வுகால வாழ்க்கையை வாழச் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட ஓய்வுகால நிதியமாகத் திகழச் செய்தல்”

## எமது பணி



“முன்மதியும் நவீனத்துவமும் கொண்ட முகாமைத்துவத்தினூடாக எமது உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுகால நன்மைகளையும் வினைத்திறன்மிக்க பணிகளையும் வழங்குதல்”

# நிதியியலின்

## முக்கிய அம்சங்கள் - 2024



## வரைபடம் 01 நிதியத்தின் வளர்ச்சி




| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 2,824 | 3,166 | 3,459 | 3,887 | 4,376 |
| வளர்ச்சி வீதம் (%) | 11.2 | 12.1 | 9.2 | 12.4 | 12.6 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 02 பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புகள் (ரூ.பில்.) | 150.7 | 165.7 | 194.6 | 210.6 | 234.4 |
| மீளளிப்புகள் (ரூ.பில்.) | 109.7 | 118.2 | 163.0 | 215.9 | 188.1 |
| தேறிய பங்களிப்புகள் (ரூ.பில்.) | 41.0 | 47.5 | 31.6 | (5.3) | 46.3 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 03 உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை




| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| மொத்த உறுப்பினர் கணக்குகள் | 19.76 | 20.34 | 21.00 | 21.50 | 22.17 |
| பங்களிக்கின்ற உறுப்பினர்கணக்குகள் | 2.6 | 2.5 | 2.7 | 2.6 | 2.9 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

தமிழ்

## வரைபடம் 04 முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




| உள்ளமைப்பு | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| அரச பிணையங்கள் (%) | 93.4 | 93.2 | 96.9 | 95.4 | 94.5 |
| பங்குரிமை மூலதனம் (%) | 2.8 | 3.8 | 2.3 | 3.5 | 4.4 |
| தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை(%) | 3.8 | 2.9 | 0.8 | 1.1 | 1.1 |

அரச பிணையங்கள் | பங்குரிமை மூலதனம் | தொகுதிக் கடன்கள் மற்றும் ஏனையவை

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 05 சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருமானம்




| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டு வருமானம் (ரூபில்.) | 285.4 | 342.2 | 315.8 | 48.1 | 513.8 |
| முதலீட்டு மீதான வருமானம் (%) | 10.6 | 11.4 | 9.5 | 13.0 | 12.4 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

தமிழ்

**வரைபடம் 06** உறுப்பினர் கணக்குகளின் இறுதி நிலுவைகளில் வரவு வைக்கப்பட்ட வட்டி




| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட வட்டி (ரூ.பில்.) | 227.3 | 251.8 | 277.5 | 436.8 | 422.8 |
| வட்டி வீதம் (%) | 9.00 | 9.00 | 9.00 | 13.00 | 11.00 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 07** உறுப்பினர் நிலுவைகளுக்கான வருவாயின் பயனுறு வீதம் எதிர் சந்தை வீதங்கள்




மூலங்கள் : ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை மற்றும் ஆண்டிற்கான பொருளாதார மீளாய்வு 2024, இலங்கை மத்திய வங்கி

தமிழ்

# தொழிற்பாட்டின் முக்கிய அம்சங்கள் 2024

### தொழில்தருநர், உறுப்பினர் மற்றும் ஏனைய ஆர்வலர்கள் தொடர்பான விசாரணைகள்:

வருகைதந்தோர் – 173, 505
கடிதங்கள் - 1,438
மேற்கொள்ளப்பட்ட மற்றும் பதிலளிக்கப்பட்ட அழைப்புக்கள் - 88,395
பெறப்பட்ட மின்னஞ்சல்கள் - 17,105 8

### 2024 இறுதியில் எண்தொகைகள் :

- உறுப்பினர் கணக்குகள் - 22.2 மில்லியன்
- பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகள் - 2.9 மில்லியன்
- தொழில்தருநர்கள் - 92,914
- தேசிய அடையாள அட்டையின் பெயர்களின்படி மீளப்பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் - 1.8 மில்லியன்
- வீடமைப்புக் கடன் உத்தரவாதச் சான்றிதழ்களைப் பெற்றவர்களின் எண்ணிக்கை – 14,533

### மீள்நிதியிடல் விபரங்கள் :

- பெறுமதி - ரூ.188.1 பில்லியன்
- நன்மைபெறுநர்களின் எண்ணிக்கை - 208,047

### ஓய்வுகாலத்திற்கு முன்னைய நன்மைகள்

- பெறுமதி - ரூ.18.2 பில்லியன்
- நன்மைபெறுநர்களின் எண்ணிக்கை – 31,072

### இ-திரட்டு முறைமை

- இ-பங்களிப்பு விபரங்களை சமர்ப்பித்தலுக்காக இணைக்கப்பட்ட தொழில்தருநர்களின் எண்ணிக்கை - 17,941 (2024 இறுதியளவில்)
- 81 சதவீதம் கொண்ட மொத்த மாதாந்த ஊ.சே. நிதியப் பங்களிப்புக்கள் ஈடுசெய்யப்பட்டுள்ளன.

### தொழில் திணைக்களம் (ஊ.சே.நிதியப் பிரிவு)

- உறுப்பினர் அடையாள அட்டையினை ஸ்கேன் செய்து உறுப்பினர் பதிவுசெய்தலைத் தவிர பங்களிப்புக்களுக்களை செலுத்துவதன் காரணமாக தோற்றம்பெற்று வரும் பிரச்சனைகளை தவிர்க்கும் பொருட்டு 30 நாட்களினுள் தொடர்புடைய தொழில் அலுவலகத்தினுள் உறுப்பினர்களைப் பதிவுசெய்வதற்கான அவரது உடலின் மேல்பாகத்தினைப் புகைப்படமொன்றை எடுப்பதற்கு மாவட்ட தொழில் அலுவலகங்களுக்கான புதிய முறையியலை அறிமுகப்படுத்தல். 2024.10.15 அன்று தொடங்கப்பட்ட இப்புதிய முறையியல் 2024.12.31 அன்று நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்ட தொழில் அலுவலகங்களிலும் அதன் முழுமையான நடைமுறைப்படுத்தலையும் நிறைவுசெய்தது.
- தொழில்தருநர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகிய இருவருக்கும் செயற்றிறன்மிக்க பணியொன்றை வழங்கும் நோக்கும் இலத்திரனியல் பணிகளை அறிமுகப்படுத்தல் மற்றும் தேவைப்படும் சட்ட ஏற்பாடுகளைப் பின்பற்றுதலுக்கு ஒப்புதல் வழங்குதலைப் பரிந்துரைத்தல்.
- ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பில் உறுப்பினர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நடமாடும் சேவைகளை நாடளாவிய ரீதியில் நடத்தியமை, சிற்றேடுகளின் விநியோகம் மற்றும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியமை.

தமிழ்



ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் இணையவழி சேவைகளின் மூலம், உறுப்பினர் நிலுவைகள், பங்களிப்புகள் மற்றும் கொடுப்பனவு விபரம் போன்ற ஊ.சே.நிதியத்துடன் தொடர்புடைய தகவல்களை நீங்கள் மிக விரைவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

# 1

# ஊ.சே.நிதியச் செயலாற்றத்தின் மீளாய்வு - 2024

## 1. அறிமுகம்

நிதியத்தின் மொத்த தேறிய சொத்துக்கள் 2024 இறுதியில் ரூ.4,375.7 பில்லியனை அடைந்து 2023 இறுதியில் பதிவுசெய்யப்பட்ட ரூ.3,886.7 பில்லியனை விட 12.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2024 இறுதியில் 22.2 மில்லியனாகக் காணப்பட்டது. 2024 இறுதியில் பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2.9 மில்லியனாக அமைந்து 2023இன் 2.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 11.5 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றுடன் காணப்பட்டது. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2023 இறுதியில் அறிக்கையிடப்பட்ட 77,651 இலிருந்து 2024 இறுதியில் 92,914 இற்கு 19.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது.

### 1.1 உறுப்பினர் பங்களிப்புக்கள் மற்றும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகள்

2024ஆம் ஆண்டுப்பகுதியில், உறுப்பினர் பங்களிப்புக்கள் 2023ஆம் ஆண்டுப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.210.58 பில்லியனிலிருந்து ரூ.234.39 பில்லியனுக்கு 11.3 சதவீதத்தினால் அதிகரித்தன. உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் மீளளிக்கப்பட்ட மொத்தத் தொகை 2024இல் ரூ.188.1 பில்லியனாக விளங்கி, 2023இல் ரூ.215.90 பில்லியனை விட 12.9 சதவீதம் கொண்ட குறைவொன்றை எடுத்துக்காட்டியது. இதற்கமைய, கடந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூ.5.3 பில்லியன் கொண்ட எதிர்க்கணியத்துடன் ஒப்பிடுகையில் 46.3 பில்லியன் கொண்ட தேறிய சாதகமானப் பங்களிப்பு (மீளளிப்புக்களைக் கழித்த மொத்தப் பங்களிப்புக்கள்) பதிவுசெய்யப்பட்டன. 2024 ஆண்டுக் காலப்பகுதியில் மீளளிப்பு கோரல்களின் மொத்த எண்ணிக்கை 208,047 ஆகக் காணப்பட்டது. இது 2023 காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட 221,822 உடன் ஒப்பிடுகையில் 6.2 சதவீதம் கொண்ட குறிப்பொன்றைப் பதிவுசெய்தது. 2024இல் முதல் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்ட மீளளிப்பு கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய தகவல்களை கீழேயுள்ள அட்டவணை 1 காண்பிக்கின்றது.

### 1.2 ஊ.சே. நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

ஊழியர் சேமலாப நிதியச் சட்டமானது பொதுவாக நாணயச் சபையென குறிப்பிடப்படும் இலங்கை மத்திய வங்கிக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. இது சட்டத்தின் நோக்கங்களுக்காக உடனடியாகத் தேவைப்படாத நிதியத்தின் பணத்தை சபை பொருத்தமாகக் கருதும் பிணையங்களில் முதலீடுசெய்து விற்பனை செய்யலாம்.

2024ஆம் ஆண்டில், சவால்மிக்க சந்தை நிலைமைகளின் கீழ் நிதிய முதலீட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை நிதியத்தின் மூலோபாய சொத்து ஒதுக்கீடு மீதான வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டன.

வீழ்ச்சியடைந்துவருகின்ற வட்டி வீதச் சூழ்நிலைகளிலுள்ள மீள்முதலீட்டு இடர்நேர்வைத்

**அட்டவணை 01** — **பகுதியளவிலான கொடுப்பனவுகள் தவிர 2024இல் மீளளிப்பு கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய தகவல்கள்**

| மீளளிப்பு வகை | மீளளிப்பு கொடுப்பனவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | மீளளிப்பு கொடுப்பனவுகளின் மொத்த தொகை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | தொகை (ரூ.பில்) | % |
| பணியிலிருந்தான ஓய்வு | 97,650 | 58.75 | 132.13 | 71.16 |
| திருமணம் | 18,676 | 11.24 | 10.93 | 5.89 |
| புலம்பெயர்வு | 3,180 | 1.91 | 11.83 | 6.37 |
| மருத்துவ காரணிகள் | 1,143 | 0.69 | 1.76 | 0.95 |
| இறந்த நபர்கள் | 6,326 | 3.81 | 5.71 | 3.08 |
| ஓய்வூதிய தொழிலொன்றுக்கான மாற்றல் | 6,938 | 4.17 | 2.74 | 1.48 |
| தன்னார்வ ஓய்வூதியத் திட்டம் | 1,238 | 0.74 | 2.35 | 1.27 |
| 30 சதவீத மீளளிப்பு கொடுப்பனவுகள் | 31,072 | 18.69 | 18.22 | 9.81 |
| **மொத்தம்** | **166,223** | | **185.67** | |

குறிப்பு: தொடக்க மீளளிப்பு கொடுப்பனவினை செயன்முறைப்படுத்திய பின்னர் குறித்த காலப்பகுதியினுள் வரவுவைக்கப்பட்ட நிதியங்கள் காணப்படுகின்றமையினால், ரூ.2.38 பில்லியன் கொண்ட பகுதியளவு கொடுப்பனவுகள் வகை விபரங்களில் உள்ளடக்கப்படவில்லை.

தணிக்கின்ற அதேவேளை நீண்டகால முதிர்ச்சிகளினால் வழங்கப்பட்ட காலத்திற்கான கட்டுப்பணத்தை மூலதனமயமாக்குவதற்கு, ஊ.சே. நிதியத் திணைக்களமானது அரச பிணையங்களில் நீண்டகால முதலீடுகளை முன்னுரிமைப்படுத்தியது. குறைந்தளவு தரமிடல்களின் காரணமாக பிரதானமாக, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கூட்டாண்மைத் தொகுதிக்கடன்கள் போன்ற ஏனைய தகைமையுடைய சாதனங்களின் முதலீட்டு வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டன. குறிப்பாக, நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை மறுசீரமைப்பதைச் சுற்றி நிலவுகின்ற நிச்சயமற்றத் தன்மைகளைக் கருத்திற்கொண்டு, இவை உயர்ந்தளவான கொடுகடன் இடர்நேர்வினால் மோசமாகப் பாதிப்படைந்தன.

2024 நடுப்பகுதியின் தொடக்கத்தில் பங்குரிமை மூலதனச் சந்தை செத்தெம்பர் நடுப்பகுதியிலிருந்து வலுவான மீட்சியொன்றைப் பின்தொடர்ந்தது. சந்தையை வரலாற்றிலேயே உயர்ந்தளவு மட்டங்களுக்கு எடுத்துச்சென்ற இம்மீளெழுச்சியானது குறைந்த அரசியல் நிச்சயமற்றத்தன்மையிலிருந்து தோன்றுகின்ற மேம்பட்ட முதலீட்டாளரினால் தூண்டப்பட்டிருக்கக்கூடும். இதற்கு பதிலிறுத்தும் விதத்தில், விரிவான பகுப்பாய்வொன்றை அடிப்படையாகக் கொண்டு, சாதகமான சந்தை நிலைமைகளின் போது ஊ.சே.நிதியமானது மூலோபாய ரீதியான அடிப்படையில் வலுவான பங்குகளை கையகப்படுத்திய அதேவேளை சந்தை ஈட்டல்களை மூலதனமயப்படுத்தி சொத்துப்பட்டியலை மீளச்சமநிலைப்படுத்துவதற்கு தெரிவுசெய்யப்பட்ட உடைமைகளை விற்பனை செய்தது.

2024இறுதியுள்ளவாறு, அரச பிணையங்களில் 94.5 சதவீதம், பங்குரிமை மூலதனங்களில் 4.4 சதவீதம், கூட்டாண்மை தொகுதிக்கடன்களில் 0.3 சதவீதம், மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளில் 0.8 சதவீதம் என்பன உள்ளடங்கலாக, நிதியத்தின் மொத்த முதலீட்டுச் சொத்துப்பட்டியல் ரூ. 4,393.82 பில்லியனாகக் காணப்பட்டது. அட்டவணை 2 மற்றும் வரைபடம் 8இல் எடுத்துரைக்கப்பட்டவாறு, அரச பிணையங்கள், பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள், கூட்டாண்மைத் தொகுதிக்கடன்கள், மற்றும் பணச் சந்தை முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2023இன் இறுதியின் ரூ.3,900.1 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.4,393.8 பில்லியனிற்கு 12.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

அட்டவணை 02 முதலீட்டுச் சொத்துப்பட்டியல் 2020- 2024

| | (ரூ.பில்) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| அரச பிணையங்கள் | 2,642.9 | 2,958.8 | 3,358.6 | 3,722.2 | 4,153.3 |
| பங்குரிமை முதலீடு | 79.9 | 121.1 | 80.9 | 138.0 | 193.4 |
| கூட்டாண்மைத்தொகுதிக் கடன்கள் | 34.9 | 23.9 | 23.6 | 14.1 | 12.9 |
| நிலையான வைப்புக்கள் | 55.8 | 57.2 | - | - | - |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 16.0 | 12.3 | 3.4 | 25.8 | 34.2 |
| **முழு மொத்தம்** | **2,829.5** | **3,173.3** | **3,466.5** | **3,900.1** | **4,393.8** |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் வளர்ச்சியானது முக்கியமாக, ரூ.446.9 பில்லியன் கொண்ட தேறிய வருமானத்தினால் பங்களிக்கப்பட்டது. அரச பிணையங்களிலுள்ள முதலீட்டு குவிவு ஆண்டிறுதியின் பங்குரிமை மூலதனச் சொத்துப் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக 2023இன் 95.4 சதவீதத்திலிருந்து 2024இன் இறுதியில் 94.5 சதவீதத்திற்கு சிறிதளவு குறைவொன்றை காண்பித்தது. பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகளின் உள்ளமைப்பு 2023இன் 3.5 சதவீதத்திலிருந்து 2024இல் 4.4 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் பணச் சந்தை முதலீடுகள் முதலீட்டுச் சொத்துப்பட்டியலினுள் அதன் உள்ளமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றமொன்றை காண்பிக்கவில்லை.

### 1.2.1 அரச பிணையங்களின் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள் மற்றும் திறைசேரி உண்டியல்களை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் 2023இன் இறுதியில் காணப்பட்ட ரூ.3,722.2 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.4,153.3 பில்லினிற்கு 11.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. 2024ஆம் ஆண்டுப்பகுதியில், ஊ.சே.நிதியம் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் மீது ரூ.455.1 பில்லியன் கொண்ட வட்டி வருமானமொன்றை ஈட்டிக்கொண்டு, 88.6 சதவீதம் கொண்ட நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானத்தினைப் பிரதிபலித்தது.

### 1.2.2 பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல்

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்கள் இரண்டையும் உள்ளடக்குகின்ற ஊ.சே. நிதியத்தின் பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் பெறுமதி 2023 இறுதியின் ரூ.138.1 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.193.4 பில்லியனிற்கு 40 சதவீதத்தினால் அதிகரித்தது. பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் பெறுமதி 2023 இறுதியின் 96.4 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.148.2 பில்லியனிற்கு 53.7 சதவீதத்தினால் அதிகரித்தது. பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் பெறுமதி மதிப்பீட்டின் காரணமாக 2023 இறுதியின் ரூ.41.7 பில்லியனிலிருந்து 2024இன் இறுதியில் ரூ.45.2 பில்லியனிற்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

ஊ.சே. நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலானது வங்கிகள், மூலதனப்பொருட்கள், நுகர்வோர் பணிகள், பொருட்கள் போன்ற வேறுபட்ட துறைகளில் தொழிற்படுகின்ற பல கம்பனிகளின் முதலீடுகளை உள்ளடக்கியிருந்தன. சந்தைப் பெறுமதியில் 2020 சனவரி 20ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையால் பின்பற்றப்படும் உலகளாவிய தொழித்துறை வகைப்படுத்தல் முறைமைக்கமைவாக ஊ.சே. நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியலின் விபரங்கள் வரைபடம் 9இல் தரப்பட்டுள்ளது. 2024ஆம் ஆண்டுப்பகுதியில் ஊ.சே.நிதியத்தின் பங்குரிமை மூலதனச்

சொத்துப்பட்டியல் 53.5 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்தையும் 5.5 பில்லியன் கொண்ட பங்குலாபத்தையும் பதிவுசெய்தது.

**வரைபடம் 09** 2024 இறுதியிலுள்ளவாறு பட்டியலிடப்பட்ட, பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு - சந்தைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டவை




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 1.2.3 கூட்டாண்மைப் படுகடன் சொத்துப்பட்டியல்

2024 இறுதியிலுள்ளவாறு நிதியத்தின் கூட்டாண்மைத் தொகுதிக்கடன் சொத்துப்பட்டியல் ஏட்டுப்பெறுமதியில் ரூ.13 பில்லியனாக விளங்கி, மொத்தச் சொத்துப்பட்டியலில் 0.3 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. இச்சொத்துப்பட்டியலில், ரூ.1,603.1 மில்லியன் கொண்ட வட்டி வருமான மொன்றை நிதியம் ஈட்டிக்கொண்டது.

### 1.2.4 நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை மத்திய வங்கியின் மீள்கொள்வனவுச் சந்தையிலும் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு மையத்திலும் நிதியங்கள் முதலீடு செய்யப்படுகின்றன. 2024ஆம் ஆண்டுப்பகுதியில், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களிலிருந்து ரூ.1,151.4 மில்லியன் கொண்ட வட்டி வருமானமொன்றினை நிதியம் ஈட்டிக்கொண்டது. இது 2023இல் 1,251.1 மில்லியனாகக் காணப்பட்டது.

### 1.2.5 நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம்

2024இல் நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானம் ரூ.513.8 பில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டின் அத்தகைய வருமானத்துடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதம் கொண்ட அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது (அட்டவணை 03). அடையப்பட்ட முதலீட்டு வருமானத்தின் 88.6 சதவீதம் கொண்ட வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக விளங்கியதுடன் 2023இன் ரூ.442.4 பில்லியனிலிருந்து 2024இல் ரூ.455.1 பில்லியனுக்கு 2.9 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. மேலும், பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட பங்குலாப வருமானம் 2023இல் ஈட்டப்பட்ட 2.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.5.5 பில்லியனாகப் பதிவுசெய்யப்பட்டது. மேலும், ஊ.சே.நிதியத்தின் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் 2023இன் ரூ.35.7 பில்லியன் கொண்ட தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் 2024இன் இறுதியில் ரூ.53.5 பில்லியன் கொண்ட தேறிய இலாபமொன்றைப் பதிவுசெய்தது.

**அட்டவணை 03** நிதியத்தின் முதலீட்டு வருமானம்

| வருமான மூலம் | 2023 | 2024 | வளர்ச்சி (%) |
|---|---|---|---|
| | தொகை (ரூ.மில்) | தொகை (ரூ.மில்) | |
| வட்டி | 442,419 | 455,126 | 2.9 |
| பங்குலாபங்கள் | 2,997 | 5,481 | 82.9 |
| இலாபம் அல்லது நட்டமூடாகச் சீர்மதிப்புப் பெறுமதியியலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம் /நட்டம்) | 35,683 | 53,488 | 49.9 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு | 4.0 | (314) | (7,950) |
| **மொத்தம்** | **481,103** | **513,782** | **6.8** |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 1.3 ஊ.சே. நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கான ஆளுகைக் கட்டமைப்பு

ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதன் அனைத்து நடவடிக்கைகளுடனும் தொடர்புடைய நிதியியல்சார் மற்றும் நிதியியல்சாரா இடர்நேர்வுகள் ஆகிய இரண்டிலும் கவனம்செலுத்துகின்ற இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பின்

இன்றியமையாத பாகமொன்றாகக் கருதப்படுகின்றது. மேலும், ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் இறுதித் தீர்மானத்தினை மேற்கொள்கின்ற சபையாக விளங்கும் இலங்கை மத்திய வங்கி, நிதியம் முகாமைசெய்யப்பட வேண்டிய இடர்நேர்வு ஏற்படக்கூடியஅளவு மற்றும் இடர்நேர்வுகளை தாங்கிக் கொள்ளக்கூடிய மட்டங்கள் போன்ற ஒட்டுமொத்த இடர்நேர்வு அளவுகளையும் குறித்துரைப்பதன் மூலம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கான கொள்கை நெறிமுறையை வழங்கின்றது.

இலங்கை மத்திய வங்கியானது ஊ.சே. நிதியத்தின் இடர்நேர்வு முகாமைத்துவ அமைப்பின் ஆளுகையினை வலுப்படுத்தும் பொருட்டு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஊ.சே. நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு என்ற பெயரிலான இரு உயர்மட்டக் குழுக்களின் மேற்பார்வையினூடாகத் தொடர்பான செயன்முறைகளை தாபித்துள்ளது. சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழுவானது இடர்நேர்வு முகாமைத்துவத் தொழிற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பாக இருப்பதுடன் ஊ.சே.நிதிய முதலீட்டு மேற்பார்வைக் குழு நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்பான உயர் மட்ட மேற்பார்வை அதிகாரங்களை வழங்குகின்றது. மேலும், ஊ.சே.நிதியத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளின் நாளாந்த முதலீட்டுத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற தொழிற்பாடு தொடர்பான அதிகாரங்கள் திணைக்கள மட்டக் குழுவான ஊ.சே. நிதிய முதலீட்டுக் குழுவிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது.

நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளின் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் விதிமுறைகளுடன் இணங்கும் வகையில், ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் நிதிய முகாமைத்துப் பிரிவின் நடுவரங்க அலுவலகமானது தொடர்ச்சியான அடிப்படையொன்றில் இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கும் ‘பாதுகாத்துக்கொள்வதற்கான முதல் நடவடிக்கையாக’ நிதியத்தின் முகாமைத்துவ நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும் நிதியத்தின் செயலாற்றத்தை கண்காணிப்பதற்கும் பொறுப்புமிக்கதாக விளங்கின்றது. மேலும், ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்துவதை கண்காணிப்பதற்கு நடுவரங்க அலுவலகம் பொறுப்புமிக்கதாக காணப்படுகின்றது.

இதற்கமைவாக, மூலோபாய சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் ஆகியவற்றில் வழங்கப்பட்ட அளவுருக்களுக்கேற்ப முதலீட்டு நடவடிக்கைகளின் வர்த்தகத்திற்கு முந்திய மற்றும் வர்த்தகத்திற்கு பிந்திய இணங்குவிப்புக்கள் கண்காணிக்கப்படுகின்றதுடன் இடர்நேர்வு ஏதேனும் ஏற்பட்டிருப்பின், இலங்கை மத்திய வங்கியின் மூத்த முகாமைத்துவத்திற்கு அவற்றை இற்றைப்படுத்துதற்கு கிரமமான இடர்நேர்வு அறிக்கையிடல் நடைமுறைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

‘பாதுகாப்பிற்கான இரண்டாவது நடவடிக்கையாக’ விளங்கும் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களமானது சுயாதீனமான மதிப்பீடொன்றின் மூலம் முதலீட்டு ஆளுகைச் செயன்முறைக்கான கொள்கைக் கட்டமைப்பை வழங்குதல், ஊ.சே.நிதியத்திற்கு இடர்நேர்வு கட்டுப்பாட்டு வழிமுறைகளைப் பரிந்துரைத்தல், முதலீட்டு மேற்பார்வைக் குழு, நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவக் குழு, சபை இடர்நேர்வு மேற்பார்வைக் குழு மற்றும் ஆளுகைச் சபை என்பனவற்றுக்கு ஊ.சே. நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இடர்நேர்வுளையும் இணங்குவித்தலையும் அறிக்கையிடுதல் போன்றவற்றுக்கு பொறுப்புமிக்கதாக விளங்கின்றது. இதற்கமைய, தற்போதுள்ள பணி தொடர்பான நடைமுறைகளை மேம்படுத்துவதற்காகவும் முதலீட்டுத் தீர்மானத்தினை மேற்கொள்ளும் செய்முறை தொடர்பில் பெருமளவு சுயாதீனத்தினை வழங்குகின்ற அதேவேளையில் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் போதியளவான மட்டமொன்றில் பேணுவதற்கும் இற்றைப்படுத்தப்பட்ட சந்தை மற்றும் ஊ.சே.நிதியத் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கிணங்க, முதலீட்டு நடவடிக்கைகளுடன் தொடர்பான ஏற்புடைய கொள்கைப் பணிப்புரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதலானது உபாயச் சொத்து ஒதுக்கு, முதலீட்டுக் கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டல்களைத் திருத்தம்செய்து இற்றைப்படுத்துவதனூடாக இடர்நேர்வு முகாமைத்துவத் திணைக்களத்தினால் கையாளப்படுகின்றது. மேலும், வங்கி இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளுக்குள் இருந்து ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் நிதியல்லா இடர்நேர்வுகளை இனங்கண்டு அறிக்கையிடுவதற்கு இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்புத் திணைக்களம்

அட்டவணை 04 அட்டவணை 4: தொழிற்பாட்டுச் செலவினம்

| விடயம் | மத்திய வங்கியின் ஊ.சே.நிதியத் திணைக்களம் | | | தொழில் திணைக்களம் | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2023 (ரூ.மில்.) | 2024 (ரூ.மில்.) | மாற்றம் (%) | 2023 (ரூ.மில்.) | 2024 (ரூ.மில்.) | மாற்றம் (%) | 2023 (ரூ.மில்.) | 2024 (ரூ.மில்.) | (மாற்றம்) (%) |
| ஆளணிச் செலவினங்கள் | 935 | 1,369 | 46.4 | 460 | 532 | 15.7 | 1,394 | 1,901 | 36.4 |
| நிர்வாகச் செலவினங்கள் | 485 | 573 | 18.1 | 346 | 501 | 44.8 | 832 | 1,074 | 29.1 |
| ஏனைய செலவினங்கள் | 74 | 66 | (10.8) | 4 | 4 | 0 | 79 | 70 | (11.4) |
| **மொத்தம்** | **1,494** | **2,007** | **34.3** | **811** | **1,037** | **27.9** | **2,305** | **3,045** | **32.1** |
| **மொத்த வருமானத்தின் சதவீதமாக மொத்தச் செலவினங்கள்** | **0.31** | **0.39** | | **0.17** | **0.2** | | **0.48** | **0.59** | |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

தொடர்ந்தும் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. 'பாதுகாப்பிற்கான மூன்றாவது நடவடிக்கையாக'இ உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களமானது ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் நிதிய முகாமைத்துவ தொழிற்பாட்டுடன் தொடர்புடைய இடர்நேர்வு உத்தரவாதத்தை வழங்கின்றது. மேலும், நிதியல்லா இடர்நேர்வு முகாமைத்துவ குழு என்ற தனித்துவமான குழுவொன்றின் ஊடாக, ஒட்டுமொத்த ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மேம்படுத்தி, தொடர்புடைய நிதியல்லா இடர்நேர்வுகளை நிவர்த்திசெய்வதற்கு தனித்துவமான பொறிமுறையொன்று காணப்படுகின்றது.

2024இல், உபாய சொத்து ஒதுக்கீடு, முதலீட்டு கொள்கை அறிக்கை மற்றும் முதலீட்டு வழிகாட்டுதல்கள் என்பனவற்றுடன் எடுத்துக்காட்டப்பட்டுள்ள அளவுருக்களுடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதிய முகாமைத்துவ நடவடிக்கைகளைப் பின்பற்றுவதையும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை செயற்பாட்டிலுள்ளதையும் ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் நடுவரங்க அலுவலகம் மீளாய்வுசெய்த அதேவேளை நிதியத்தினதும் நிதியத்திற்கான இடர்நேர்வு சீராக்கப்பட்ட ஆதாயத்தையும் பாதுகாப்பதை உறுதிசெய்கின்றது. 2021 முதலீட்டு வழிகாட்டல்களின் மூலம் குறித்துரைக்கப்பட்டவாறு இந்நடவடிக்கைகளை கிரமமாக அறிக்கையில் செயற்படுத்தப்பட்டது. மேலும், ஊ.சே.நிதியத் திணைக்களமானது அதன் நிதியல்லா இடர்நேர்வுகளை இனங்கண்டு நிவர்த்திசெய்வதில் தொடர்ந்தும் கவனம்செலுத்திய அதேவேளை இலங்கை மத்திய வங்கியின் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புடன் அணிசேர்ந்திருக்கின்றது. இதற்கமைவாக, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தின் நிதியல்லா இடர்நேர்வுகளை இனங்கண்டு மீளாய்வு செய்வதற்கும் அத்துடன் அதன் இடர்நேர்வுத் தணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானித்து கண்காணிப்பதற்கு மீளாய்வுகள் நடாத்தப்பட்டன.

## 1.4 தொழிற்பாட்டுச் செலவினம்

நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம், 2023இன் ரூ.2,304.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் ரூ.3,044.7 மில்லியனுக்கு அதிகரித்து 32 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைக் காட்டியமைக்கு ஆளணிச் செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவினங்கள், 2023இன் 0.48 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுப்பகுதியில் 0.59 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டன (அட்டவணை 04).

## அட்டவணை 5: வீடமைப்பு கடன் உத்தரவாத வசதி

| விடயம் | வழங்கப்பட்ட உத்தரவாதச் சான்றிதழ்களின் எண்ணிக்கை | ஒப்புதலளிக்கப்பட்ட வீடமைப்புக் கடன் தொகை (ரூ.மில்) | செலுத்தத்தவறிய கடன் தவணைகளுடன் தொடர்புடைய கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட தொகை (ரூ.மில்) |
|---|---|---|---|
| 2015 | 13,132 | 5,489 | 2,522 |
| 2016 | 12,780 | 5,414 | 2,541 |
| 2017 | 10,998 | 4,946 | 2,485 |
| 2018 | 10,036 | 4,974 | 2,759 |
| 2019 | 10,022 | 5,097 | 3,164 |
| 2020 | 8,537 | 4,497 | 3,321 |
| 2021 | 9,068 | 5,423 | 3,573 |
| 2022 | 9,443 | 6,127 | 3,669 |
| 2023 | 13,784 | 10,240 | 4,236 |
| 2024 | 14,533 | 12,717 | 1,555 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 1.5 வரிச் செலவினம்

2018 ஏப்பிறல் 01 தொடக்கம் நடைமுறைக்குவரும் விதத்தில், 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், நிதியத்திற்கு ஏற்புடைய வருமான வரி வீதம் 14 சதவீதமாகும். 2023இன் ரூ.63,134 மில்லியனுடன் ஒப்பிடுகையல் வரிச் செலவினமானது 2024இல் 1.6 சதவீத அதிகரிப்புடன் ரூ.63,137 மில்லியனிற்கு அதிகரித்தது.

### 1.6 உறுப்பினர் கணக்கு நிலுவைகள் மற்றும் வரவுவைக்கப்பட்ட வட்டி

2024 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான உறுப்பினர் கணக்குகளின் இறுதி நிலுவை மீது 11.00 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வட்டி வீதமொன்றைப் பிரகடனப்படுத்தக் கூடியதாகவிருந்தது. இதற்கமைவாக, உறுப்பினர் கணக்குகளுக்கு ரூ.422.8 பில்லியன் வட்டியாக வரவுவைக்கப்பட்டன. இதன்விளைவாக, உறுப்பினர் கணக்கு நிலுவைகள் 2023இன் இறுதியில் ரூ.3,817.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இன் இறுதியில் ரூ.4,289.5 பில்லியனிற்கு 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது.

வரைபடம் 10 உறுப்பினர் நிலுவைகளும் வரவு வைக்கப்பட்ட வட்டியும்




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 06 சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

| விபரம் | | ஆண்டு | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 2020 | 2021 | 2022 | 2023 | 2024 |
| புதிய பதிவுகள் | தொழில் தருநர்கள் | 5,092 | 4,222 | 5,517 | 7,795 | 8,824 |
| | ஊழியர்கள் | 427,016 | 18,298 | 31,415 | 32,027 | 544,687 |
| மாகாண ரீதியாக தொழில்தருநர் பதிவுகள் (மொத்த தொழில்தருநர் பதிவுகளின் சதவீதமாக) | மேல் | 45.1 | 50.8 | 46.6 | 45.4 | 67.8 |
| | வடக்கு மற்றும் கிழக்கு | 11.3 | 10.1 | 12.2 | 11.1 | 4.0 |
| | ஏனையவை | 43.6 | 39.1 | 41.2 | 43.5 | 28.2 |
| முதலாவது அறிவித்தல்கள் | அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண் | 11,395 | 8,273 | 11,389 | 13,955 | 14,243 |
| | கோரப்பட வேண்டிய தொகை (ரூ.மில்லியன்) | 5,076 | 4,026 | 7,258 | 7,949 | 7,176 |
| சிவப்பு அறிவித்தல்கள் | அனுப்பப்பட்ட அறிவித்தல்களின் எண். | 7,742 | 7,319 | 7,917 | 9,860 | 7,986 |
| | கோரப்பட வேண்டிய தொகை (ரூ.மில்லியன்) | 3,884 | 3,956 | 5,241 | 4,561 | 4,611 |
| கோப்பிடப்பட்ட வழக்குகள் | வழக்குகளின் எண்ணிக்கை | 2,712 | 2,218 | 1,664 | 2,512 | 2,291 |
| | அறவிடப்பட்ட தொகை (மில்லியன்) | 329 | 557 | 826 | 633 | 719 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 1.7 வீடமைப்புக் கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக உறுப்பினர்களுக்கு உத்தரவாதச் சான்றிதழ்களை வழங்குதல்

தொழில் ஆணையாளர் அனுமதியுடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்கள் பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களான வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதி கூட்டுத்தாபன வங்கி அரசாட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஊழியர் சேமலாப நிதியத்தின் உறுப்பினர்களை வசதிப்படுத்தும் குறிக்கோளுடன் வீடமைப்பு கடன் உத்தரவாத திட்டம் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

2024 காலப்பகுதியில், ஊ.சே.நிதியத் திணைக்களமானது ரூ.12,717 மில்லியன் பெறுமதியில் 14,533 கடன் உத்தரவாதச் சான்றிதழ்களை தொழில் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. மேலும், 2023இல் உறுப்பினர்களினால் செலுத்தப்படாத வீடமைப்புக் கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு 2024இல் ஏறத்தாழ ரூ.1,555 மில்லியன் தொகை தொடர்புடைய உறுப்பினர் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன்வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது. (அட்டவணை 5)

## 1.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊ.சே.நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க, பொதுநிருவாகத்திற்கும் ஊ.சே. நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக தொழில் திணைக்களம் இருக்கின்றது. இதற்கமைவாக, 2024இல் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்குகின்ற விதத்தில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை அலுவலகங்களும் 8,824 புதிய நிறுவனங்களையும் 544,687 புதிய ஊழியர்களையும் பதிவுசெய்தன. மேலும் 2024ஆம் ஆண்டுப்பகுதியில், பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களில் 67.8 சதவீதத்திற்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவுசெய்யப்பட்டனர்.

சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு தொழில் திணைக்களத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இதற்கமைய, மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணைத் தொழில் அலுவலகங்களும் நிலுவையிலுள்ள முறையே ரூ.7,176 மில்லியன் மற்றும் ரூ.4,611 மில்லியன் ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களைச் செலுத்தக் கோரி 14,243 முதலாவது அறிவித்தல்களையும் 7,986 சிவப்பு அறிவித்தல்களையும் அனுப்பி வைத்துள்ளன. மேலும், சிவப்பு அறிவித்தல்கள் கிடைத்ததன் பின்னர் 28 நாட்களினுள் நிலு-வைகளைத் தீர்ப்பனவு செய்யத் தவறியிருந்த 2,291 நிறுவனங்களுக்கெதிராக சட்ட ரீதியான வழக்குகளைத் தொடுத்ததன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.719 மில்லியனை அறவிட்டுக் கொண்டது (அட்டவணை 06).

### 1.9 ஊ.சே. நிதிய உறுப்பினர்களை மீளப்பதிவு செய்தல்

தனித்துவமான உறுப்பினர் அடையாளப்படுத்தல் முறைமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது அதன் செயற்பாட்டிலுள்ள உறுப்பினர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கங்களையும் தேசிய அடையாள அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முழுப் பெயர்களையும் தொடர்ந்தும் மீளப்பதிவு செயன்முறையை மேற்கொண்டது தேசிய அடையாள அட்டை தொடர்பான தகவல்களின் துல்லியத்தை உறுதிப்படுத்தும் வகையில், ஆட்பதிவுத் திணைக்களத்தின் தரவுத்தளத்திற்கான பெறுவழியைப் பெற்றுக் கொள்வதன் மூலம் உறுப்படுத்தல் செயன்முறை வலுப்படுத்தப்பட்டுள்ளது. 2024 காலப்பகுதியில் 70,222 செயற்பாட்டிலுள்ள உறுப்பினர்கள் மீளப்பதிவுசெய்யப்பட்டு, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 181 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க அதிகரிப்பொன்றைப் பிரதிபலித்தது. இது 2024 ஆண்டிறுதியில் மீளப்பதிவுசெய்யப்பட்ட செயற்பாட்டிலுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 1,779,992 ஆகும். தொடர்புடைய நடைமுறைகளின் மீள்பதிவுசெய்தல் படிவத்தினதும் தரப்படுத்தலினதும் எளிமைப் படுத்தப்பட்ட பதிப்பினை அறிமுகப்படுத்தியதன் மூலம் மீள்பதிவுசெய்தல் செயன்முறையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட அண்மையகால நடவடிக்கைகளுடன் இவ் அடைவு வசதிப்படுத்தப்பட்டது.

மேலும், 2024 யூலை 1ஆம் திகதி அன்று, ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கான ஊ.சே.நிதிய இணையவழி நிலுவை விசாரணை வசதியினை வழங்குவதற்கான பொறுப்பினை மீள் பதிவு செய்தல் பிரிவு எடுத்திருந்தது. இதற்கமைவாக, 2024ஆம் ஆண்டுப்பகுதியில், செயன்முறையை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் மூலம் இணையவழி நிலுவை விசாரணை வசதிக்கான 4,850 விண்ணப்பங்களை வெற்றிகாரமாக செயன்முறைப்படுத்துவதற்கு இயலச்செய்யப்பட்டன.

### 1.10. பங்களிப்புக்களை ஏற்றுக்கொள்ளுதல்

ஊ.சே.நிதியச் சட்டத்தின் பிரகாரம், 50இற்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட தொழில்தருநர்கள் ஊ.சே.நிதிய பங்களிப்பு விபரங்களை இலத்திரனியல் முறையில் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாகும். மேலும், இவ் அணுகுமுறையா-னது தொழில்வாய்ப்பிலுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாமல் அனைத்து தொழில்தருநர்களுக்கும் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளது. எனினும், 50இற்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட தொழில்தருநர்கள் C படிவத்தைப் பயன்படுத்தி ஊ.சே.நிதிய பங்களிப்பு விபரங்களை சமர்ப்பிப்பதற்கான தெரிவினைக் கொண்டுள்ளனர்.

#### 1.10.1. C படிவங்களை சமர்ப்பித்தலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதலும்

C படிவங்களை சமர்ப்பிக்கின்ற தொழில் தருநர்களுக்கு ஊ.சே.நிதியப் பங்களிப்புக்களை செலுத்துவதற்கு பல்வேறு வழிகள் வழங்கப்படுகின்றன. தபால் மூலம் காசோலைகளையும் காசுக் கட்டளைகளையும் C படிவத்துடன் ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு அனுப்புதல் அல்லது வைட்ஹவேஸ் கட்டடம், கொழும்பு 01இல் அமைந்துள்ள ஊ.சே.நிதியத் திணைக்களத்தின் சேகரிப்பு கருமபீடங்களுக்கு கையளித்தல் என்பன இதில் உள்ளடங்கின்றன. மேலும், 2015 தொடக்கம், மக்கள் வங்கியின் கிளைகளினூடாக ஊ.சே.நிதிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான நாடளாவிய ரீதியிலான வசதி இயலச்செய்யப்பட்டுள்ளன.

### 1.10.2. இலத்திரனியல் ஊடகத்தின் ஊடாக ஊ.சே. நிதியப் பங்களிப்புகளை சமா்ப்பித்தல்

காகிதங்களற்ற சூழலொன்றில் தொழிற்பாட்டு செயற்றிறனை மேம்படுத்துவதற்கு, ஊ.சே.நிதியப் பங்களிப்பு சேகரிப்பில் டிஜிட்டல் மாறுதலடைதலை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் செயற்படுத்தி வருகின்றது. தொழிற்பாடுகளை ஒழுங்குமுறைப்படுத்தியுள்ள இலத்திரனியல் பங்களிப்பை சமர்ப்பிப்பதற்கான தொழில்தருநர் பங்கேற்பு குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டுள்ளது.

2021இல் ஊ.சே.நிதிய பங்களிப்பைச் சமா்ப்பிப்பதற்கு கிடைக்கக்கூடிய இலத்திரனியல் ஊடக வழிகளை விரிவுபடுத்தியதன் வாயிலாக, ‘ஊ.சே.நிதியத்தின் இணையவழி சேவைகளின்’ ஊடாக தொழில்தருநா்கள் தமது இ-திரட்டுக்களை சமா்பிப்பதற்கு ஊ.சே.நிதியத் திணைக்களம் இயலச்செய்துள்ளது. இது அதன் அலுவல்சாா் வலைத்தளத்தினூடாக வழங்கப்படும் வலைத்தளம் அடிப்படையிலான பிரயோகமொன்றாகும். ‘லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக’ பங்கேற்கும் உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகளின் மூலம் தொடா்புடைய ஊ.சே.நிதியப் பங்களிப்பு கொடுப்பனவுகள் இணையவழியில் மேற்கொள்ளப்படலாம் அல்லது காசோலையினால் மேற்கொள்ளப்படலாம். 2024இல், ஊ.சே. நிதியத்தின் இணையவழி சேவைத் தளத்தின் ஊடாக ஊ.சே.நிதிய சேகரிப்பிற்காக இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கொமா்ஷல் வங்கி, டிப்சிசி வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, மற்றும் நேஷன் டிரஸ்ட் வங்கி, சம்பத் வங்கி, செலான் வங்கி, மற்றும் பேன் ஏசியா வங்கி போன்ற ஒன்பது உரிமம்பெற்ற வா்த்தக வங்கிகள் பங்களித்திருந்தன.

இப்புதிய ஊ.சே.நிதியத்தின் இணையவழி சேவைகள் முறைமையின் முக்கிய அநுகூலங்களில் ஒன்றாக கொடுப்பனவுச் செலுத்தப்பட்டதை வெற்றிகரமாக உறுதிப்படுத்தி 24 மணித்தியாலத்தினுள் தனிப்பட்ட உறுப்பினா் கணக்குகளைப் புதுப்பிப்பதற்கான ஆற்றல் விளங்குகின்றது. மேலும் இது, செயன்முறைப்படுத்துவதற்கான காலத்தை குறைப்பதுடன் தொடா்ச்சியான பெயா் வேறுபாட்டு சிக்கல்களையும் நீக்குகின்றது. இம்முன்னேற்றமானது மிகவும் விபரமான ஊ.சே. நிதியத் தரவுத்தளமொன்றை தாபிப்பதற்கு குறிப்பிடத்தக்களவில் பங்களித்து, எதிா்காலத்தில் உறுப்பினா் விபரங்களை திருத்துவதற்கான தேவையினை குறைத்துள்ளது. ஊ.சே. நிதியத்தின் நவீனமயப்படுத்தல் முயற்சிகளின் மாற்றத்திற்கால் மைற்கல்லொன்றாக இம்முறைமை கருதப்படுவதோடு, பங்களிப்பு முகாமைத்துவத்தில் செயற்றிறனையும் துல்லியத்தையும் மேம்படுத்துகின்றது. டிஜிட்டல் பின்பற்றுதலை ஊக்குவிக்கும் வகையில், ஊ.சே.நிதியத் திணைக்களமானது 2024இல் ஊ.சே.நிதியத்தின் இணையவழி சேவைகள் பற்றிய விரிவான விழிப்புணா்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

2024இல் இலத்திரனியல் ஊடகத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த ஊ.சே.நிதிய பங்களிப்பு, ரூ.191.2 பில்லினாக விளங்கி, 14.8 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளா்ச்சியனைப் பிரதிபலித்தது. ஊ.சே.நிதியத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட 81.4 சதவீதம் கொண்ட மொத்தப் பங்களிப்புக்களை இது குறிப்பிடுவதோடு, டிஜிட்டல் தளங்கள் மீது அதிகளவில் தங்கியிருப்பதை எடுத்துக்காட்டுகின்றது. இ-ஊடகத்தைப் பயன்படுத்தி, 17,941 கொண்ட தொழில்தருநா்களுடன் பங்களிப்புக்களை சமா்ப்பிப்பதற்கான இலத்திரனியல் ஊடகத்துடனான தொழில்தருநரின் ஈடுபாடானது சீராக வளா்ச்சியடைந்துள்ளதோடு, 24 சதவீத மொத்த தொழில்தருநா் தளத்திற்கு வகைகூறியது.

## 1.11 ஓய்வுக்கு முன்னரான மீளளிப்புத் திட்டம்

2012ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க ஊழியா் சேமலாப நிதிய (திருத்தச்) சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் அதைத்தொடா்ந்து 2015இல் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நடைமுறைகளுக்கிணங்கவும், 30 சதவீதம் கொண்ட ஓய்விற்கு முன்னரான நன்மைத் திட்டம் 2015 யூலை 01 திகதி அன்று நடைமுறைக்கு வந்தது. ஊ.சே.நிதியத்தின் உறுப்பினா்களிடையே இத்திட்டம் அதிகளவு கேள்விமிக்கதாக காணப்படுகின்றது. 2024இன் இறுதியளவில், மொத்த ரூ. 167.7 பில்லியன் தொகை, 298,048 நன்மைபெறுநா்களுக்கு மீளளிக்கபட்டது. 2024ஆம் ஆண்டுபகுதியில், இத்திட்டத்தின் கீழ், ரூ.18.2 பில்லியன் 31,072 எண்ணிக்கையிலான நன்மைபெறுநா்களுக்கு வழங்கப்பட்டது. எனினும், உறுப்பினா்களுக்கான 30 சதவீத மீள்நிதியிடல்கள் 2023இல் பகிா்ந்தளிக்கப்பட்ட ரூ.25.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2024இல் 28.3 சதவீதத்தினால் குறைக்கப்பட்டன.

## 1.12 உறுப்பினர் கணக்கு கூற்றுக்களை வழங்குதல்

ஊ.சே.நிதியச் சட்டத்தின் 5(1) (ஒ) மற்றும் 5அ பிரிவுகளின் தேவைப்பாடுகளைப் பின்தொடர்ந்து, ஊ.சே.நிதியமானது கணக்குகளின் கூற்றுக்களினூடாக பங்களிக்கும் உறுப்பினர்களின் கணக்கு விபரங்களை வெளியிடுகின்றது.

கொடுக்கல் வாங்கல்களினதும் கணக்கு நிலுவைகளினதும் தெளிவான விபரங்களை வழங்கியதன் மூலம் நிதியத்துடன் பதிவுசெய்யப்பட்ட தொழில் தருநர்களினூடாக இக்கூற்றுக்கள் ஆண்டிற்கு இருமுறை பகிர்ந்தளிக்கப்பட்டு, வெளிப்படைத்தன்மையைப் பேணி வளர்ப்பதுடன் தொழில்தருநர்களின் சேமிப்புக்களைக் கண்காணிப்பதற்கு இயலச்செய்துள்ளன. இதற்கமைவாக, 2023இன் முதலாம் மற்றும் இரண்டாம் அரையாண்டுகள் மற்றும் 2024இன் முதலாம் அரையாண்டினதும் உறுப்பினர் கணக்குக் கூற்றுக்கள் 2024இல் பகிர்ந்தளிக்கப்பட்டன (அட்டவணை II-10).

**அட்டவணை 07 உறுப்பினர் கணக்குக் கூற்றுக்களை வழங்குதல்**

| காலப்பகுதி | தொழில் தருநர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கூற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2023இன் முதலாம் அரையாண்டு | 68,401 | 2,100,506 |
| 2023இன் இரண்டாம் அரையாண்டு | 76,722 | 2,536,174 |
| 2024இன் முதலாம் அரையாண்டு | 72,163 | 2,146,285 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## 1.13 ஏனைய பணிகள்

2024ஆம் ஆண்டுகாலத்தில், பதிவேட்டுத் திருத்தங்கள் பிரிவானது உறுப்பினர் கணக்குகளுடன் தொடர்புடைய ஏறத்தாழ 101,743 ஊ.சே.நிதியத்தின் பதிவேட்டுத் திருத்தங்களைப் வெற்றிகரமாக செயற்படுத்தியமையினால் ஊ.சே.நிதியத் திணைக்களத்தினுள் இப்பதிவேட்டுத் திருத்தப் பிரிவின் அர்ப்பணிப்புமிக்க முயற்சிகள் தெளிவாகப் புலப்பட்டன.

குறிப்பாக, இத்திருத்தங்களுக்கு மத்தியில், 91,095 கொண்ட பெயர்/தே.அ.அ திருத்தங்கள் காணப்பட்டன மற்றும் 10,648 கொண்ட கணக்குத் திருத்தங்கள் காணப்பட்டன. பிராந்திய அலுவலகங்களினூடாக கிடைக்கப்பெற்ற திருத்தங்களுக்கான 15,647 கொண்ட கணிசமானளவிலான கோரிக்கைகளை இது உள்ளடக்கியது.

2024ஆம் ஆண்டில், கணக்குத் திருத்தங்களின் மொத்த கோரிக்கைகள் அதிகரித்துள்ளன என அவதானிக்கப்பட்டுள்ளது. எனினும், பெயர் மற்றும் தே.அ.அட்டை இலக்கத்தில் ஏற்படும் திருத்தங்களில் சிறிதளவு குறைவொன்று காணப்பட்டுள்ளது. இக்குறைப்பானது கடந்த ஆண்டில் ஊ.சே.நிதிய வலைத்தளத்தினூடாக புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்ட இணையவழி பங்களிப்பு கொடுப்பனவு முறைமையின் சாதகமானத் தாக்கங்களுக்கு பங்களித்திருக்கலாம். பெயர்/ தே.அ.அட்டை இலக்கத் திருத்தக் கோரிக்கைகளின் கணிசமானளவு எண்ணிக்கையை இது குறைத்துள்ளது. இதற்கமைவாக, நடைமுறையிலுள்ள மீள்பதிவு செய்தல் செயற்றிட்டத்தினூடாக, தே.அ.அட்டையின் தகவல்களையும் சேர்த்து தரவுத்தளத்திலுள்ள உறுப்பினர் தகவல்களின் உள்ளடக்கம் இக்குறைப்பிற்கு மேலும் பங்களித்துள்ளது.

மேலும், ஊ.சே.நிதிய சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான வசதியான அணுகலுடன் உறுப்பினர்களை வசதிப்படுத்துகின்ற வகையில், 2024 நவெம்பர் 01 அன்று புதிய பொறிமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டு, பிராந்திய அலுவலகங்களுக்கு பெயர் மற்றும் தே.அ.அட்டை திருத்தங்களை மேற்கொள்வதற்கான அதிகாரம் வழங்கப்பட்டது. உறுப்பினர் பதிவுகளின் விரைவான திருத்தத்தை இப்பொறிமுறை இயலச்செய்கின்றது. மேலும் இது தலைமை அலுவலகத்திலிருந்தான தலையீட்டை நீக்குவதோடு, திருத்தச் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துகின்றது. ஊ.சே.நிதிய உறுப்பினர்களின் வசதிக்காக தொழில்நுட்பத்தைப் பின்பற்றி உச்சப்பயனடைவதற்கான ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் அர்ப்பணிப்பினை இது பிரதிபலிக்கின்ற அதேவேளை அவர்களின் தோற்றம்பெற்றுவரும் தேவைகளுக்கான முனைப்புமிக்க பதிலிறுப்பையும் உறுதிசெய்கின்றது.

பொதுமக்கள் தொடர்புகள் மற்றும் விசாரணைகள் கருமபீடம், ஊ.சே.நிதியத் திணைக்களத்திற்கு வருகை தந்த 173,505 எண்ணிக்கையிலான உறுப்பினர்களின் சேவை கோரிக்கைகளை நிறைவேற்றியதன் மூலம் ஊ.சே.நிதியத்தின் அனைத்து ஆர்வலர்களுக்குமான பெறுமதியான சேவையையும் வழங்கியுள்ளதுடன் முறையே தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் மின்னஞ்சல்கள் ஊடாக கிடைக்கப்பெற்ற 88,395 மற்றும் 17,105 உறுப்பினர் விசாரணைகளுக்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும், உறுப்பினர்கள், தொழில்தருநர்கள் மற்றும் ஏனைய ஆர்வலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 1,438 கடிதங்களுக்கு பதிலிறுப்புக்கள் அனுப்பப்பட்டன.

# பிரிவு இ

# நிதியியல் கூற்றுக்கள்



## ஊழியர் சேமலாப நிதியம்
## வருமானம் மற்றும் செலவினக் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை | குறிப்பு | 2024 மொத்தம் ரூபா.'000 | 2023 மொத்தம் ரூபா.'000 |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | 6 | 455,125,984 | 442,419,326 |
| பங்குலாப வருமானம் | 7 | 5,481,116 | 2,997,302 |
| "சீர்மதிப்புப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (நட்டம்)" | 8 | 53,488,367 | 35,682,639 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழத்தலுக்கான கூடிய/ (குறைந்த) ஏற்பாடு | 9 | (313,748) | 4,036 |
| **முதலீட்டு வருமானம்** | | **513,781,719** | **481,103,303** |
| ஏனைய வருமானம் | 10 | 326,307 | 241,106 |
| **மொத்த வருமானம்** | | **514,108,026** | **481,344,409** |
| தொழிற்பாட்டுச் செலவினங்கள் | 11 | (3,044,668) | (2,304,699) |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/ (நட்டம்)** | | **511,063,358** | **479,039,710** |
| வரிச் செலவு | 12 | (64,137,133) | (63,134,071) |
| **ஆண்டுக்கான இலாபம்/ (நட்டம்)** | | **446,926,225** | **415,905,639** |
| முன்கொண்டு வரப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | 759,127 | 46,372 |
| (கழிக்குக) : - இவ்வாண்டுப்பகுதியில் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் தேறல்செய்யப்படாத இலாபம் | | - | (23,707,153) |
| (கழிக்குக) : - இவ்வாண்டுப்பகுதியில் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் தேறல்செய்யப்படாத இலாபம் | | (3,876,814) | (10,662,085) |
| கூட்டுக : முன்னைய ஆண்டுகளில் பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனத்தின் தேறல்செய்யப்படாத இலாபம் | 24.1 | 28,829,186 | - |
| **பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபம்** | | **472,637,724** | **381,582,773** |
| **இலாபப் பகிர்ந்தளிப்பு** | | | |
| கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் நடப்பாண்டில் செலுத்தப்பட்ட வட்டி | | (6,997,679) | (8,218,285) |
| கூட்டுக/ (கழிக்குக): பங்குலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்/ ஒதுக்கிற்கான மாற்றல் | | - | 64,150,000 |
| கூட்டுக/ (கழிக்குக): சந்தை தளம்பல் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்தான மாற்றல்கள்/ ஒதுக்கிற்கான மாற்றல் | | (42,500,000) | - |
| 2024 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 11% (2023-13.00%) | | (422,788,621) | (436,755,361) |
| **அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை** | | **351,424** | **759,127** |

பக்கங்கள் 144 இலிருந்து 195 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.
இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் இந்நிதியியல் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

ஆளுகைச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

நிஹால் டி லியனகே
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2025 மே 21

## ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை | | 2024 | 2023 |
|---|---|---|---|
| | குறிப்பு | ரூபா.'000 | ரூபா.'000 |
| **சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனம் | 13 | 419,555 | 382,512 |
| தொழிற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள் | | 297,885 | 297,885 |
| அருவச் சொத்துக்கள் | 14 | 8,612 | 5,696 |
| பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | 15 | 193,421,268 | 138,050,616 |
| நிலையான வருமானப் பிணையங்கள் | 16 | 4,200,395,926 | 3,762,097,038 |
| கையிருப்புக்கள் | | 27,945 | 22,683 |
| பெறத்தக்க வட்டி | | 66,500 | 70,000 |
| பெறத்தக்க பங்களிப்புக்கள் | | 20,200,000 | 18,600,000 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 17 | 697,432 | 3,036,457 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 18 | 4,678,687 | 5,090,003 |
| | | **4,420,213,810** | **3,927,652,890** |
| **பொறுப்புக்கள்** | | | |
| செலுத்தத்தக்க கணக்குகள் | 19 | 748 | 4,870 |
| ஒன்றுசேர்ந்த செலவினங்கள் | | 923,919 | **773,094** |
| நடைமுறை வட்டி பொறுப்புக்கள் | 12 | **33,477,467** | 32,355,754 |
| பிற்போடப்பட்ட வட்டி பொறுப்புக்கள் | 20 | 3,684,088 | 3,253,331 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 21 | 6,417,925 | **4,580,040** |
| | | **44,504,147** | **40,967,089** |
| | | | |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **4,375,709,663** | **3,886,685,801** |
| | | | |
| உறுப்பினர் நிலுவைகளினால், | 22 | 4,289,544,449 | 3,817,891,512 |
| காட்டப்பட்டவை | | **4,289,544,449** | **3,817,891,512** |
| | 23 | 52,657,000 | 10,157,000 |
| ஒதுக்குகள் | 24.2 | 33,508,214 | 58,637,289 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | **86,165,214** | **68,794,289** |
| | | | |
| **நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி** | | **4,375,709,663** | **3,886,685,801** |

பக்கங்கள் 144 இலிருந்து 195வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் இந்நிதியியல் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

ஆளுகைச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

.........................................

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

.........................................

நிஹால் டி லியனகே
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2025 மே 21

## ஊழியர் சேமலாப நிதியம்
## பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கணக்கு

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை | குறிப்பு | 2024<br>மொத்தம்<br>ரூபா.'000 | 2023<br>மொத்தம்<br>ரூபா.'000 |
|---|---|---|---|
| ஆண்டின் ஆரம்பத்திலிருந்த காசு மீதி | | 5,147,110 | 4,333,882 |
| மொத்தப் பெறுகைகள் | 25 | 681,373,528 | 620,016,951 |
| மொத்தக் கொடுப்பனவுகள் | 26 | (681,841,680) | (619,203,723) |
| ஆண்டின் இறுதியிலிருந்த காசு மீதி | | **4,678,958** | **5,147,110** |

பக்கங்கள் 144 இலிருந்து 195 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.

இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் இந்நிதியியல் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

ஆளுகைச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

.........................................................

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

திகதி: 2025 மே 21

...............................

நிஹால் டி லியனகே
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

## ஊழியர் சேமலாப நிதியம்
## முதலீடுகளின் கூற்று

| முதலீட்டு வகை | குறிப்பு | முகப்புப் பெறுமதி ரூபா.'000 | பதிவழிக்கப்பட்ட கிரயம் ரூபா.'000 | கிரயம் ரூபா.'000 | சீர்மதிப்புப் பெறுமதி ரூபா.'000 | ஏட்டுப் பெறுமதி ரூபா.'000 |
|---|---|---|---|---|---|---|
| **2024 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| திறைசேரி முறிகள் | 16.1.1 | 4,195,453,228 | 4,084,070,173 | 4,030,144,944 | 4,164,733,105 | 4,084,070,173 |
| திறைசேரி உண்டியல்கள் | 16.1.2 | 70,664,535 | 69,194,612 | 66,468,616 | 69,173,307 | 69,194,612 |
| கூட்டாண்மை படுகடன் சாதனங்கள் | 16.2 | 12,640,570 | 12,955,124 | 12,640,570 | 12,703,856 | 12,954,034 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 16.3 | 34,150,000 | 34,177,107 | 34,150,000 | 34,177,107 | 34,177,107 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனங்கள் | 15.1 | - | - | 88,374,363 | 148,249,576 | 148,249,576 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனங்கள் | 15.2 | - | - | 9,145,989 | 45,171,692 | 45,171,692 |
| | | | | **4,240,924,482** | **4,474,208,643** | **4,393,817,194** |
| **2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு** | | | | | | |
| திறைசேரி முறிகள் | 16.1.1 | 3,354,860,516 | 3,301,910,739 | 3,234,838,801 | 3,167,996,437 | 3,301,910,739 |
| திறைசேரி உண்டியல்கள் | 16.1.2 | 444,357,807 | 420,297,186 | 400,194,434 | 419,341,945 | 420,297,186 |
| கூட்டாண்மை படுகடன் சாதனங்கள் | 16.2 | 13,640,570 | 14,071,177 | 13,640,570 | 13,401,341 | 14,068,769 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 16.3 | 25,800,000 | 25,820,344 | 25,800,000 | 25,820,344 | 25,820,344 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனங்கள் | 15.1 | - | - | 85,779,108 | 96,376,320 | 96,376,320 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனங்கள் | 15.2 | - | - | 9,640,989 | 41,674,296 | 41,674,296 |
| | | | | **3,769,893,902** | **3,764,610,683** | **3,900,147,654** |

பக்கங்கள் 144 இலிருந்து 195 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளும் குறிப்புக்களும் நிதியியல் கூற்றின் மிக முக்கியமான பகுதிகளாகும்.
இந்நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகும்.
இலங்கை மத்திய வங்கியின் ஆளுகைச் சபையினால் இந்நிதியியல் கூற்றுக்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன.

ஆளுகைச் சபைக்காகவும் அதன் சார்பிலும்,

முனைவர் பி. நந்தலால் வீரசிங்க
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

நிஹால் டி லியனகே
கண்காணிப்பாளர்
ஊழியர் சேமலாப நிதியம்

திகதி: 2025 மே 21

## ஊழியர் சேமலாப நிதியம்
## காசுப்பாய்ச்சல்கள் கூற்று

| திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானவை | 2024 | 2023 |
|---|---|---|
| | ரூபா.'000 | Rs.'000 |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி | 437,765,204 | 405,207,532 |
| உரிமை மூலதனங்களிலிருந்தான பங்குலாபங்கள் | 7,210,698 | 3,216,720 |
| மேலதிகக் கட்டணங்கள் மற்றும் ஏனைய வருமானம் | 73,351 | 7,018 |
| தொழிற்பாட்டுச் செலவினங்களின் கொடுப்பனவுகள் | (2,300,194) | (1,539,400) |
| வழங்கப்பட்ட முற்பணங்கள் | (2,524) | (8,607) |
| கடன் வழங்கியோர் மற்றும் ஏனைய கொடுபடத்தக்கவற்றின் தீர்ப்பனவுகள் | (4,484,288) | (4,850,002) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு** | **438,262,247** | **402,033,261** |
| செலுத்தப்பட்ட வரிகள் | (62,476,636) | (56,680,643) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **375,785,611** | **345,352,618** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்கள்** | | |
| நிதியியல் சொத்துக்களில் முதலீடுகள் | (3,003,130,098) | (2,972,024,779) |
| முதலீடுகளின் முதிர்ச்சிகள் | 2,579,754,905 | 2,632,643,670 |
| நிதியியல் முதலீடுகளின் விற்பனை மீதான பெறுகைகள் | 975,767 | 154,195 |
| நிலையான சொத்துக்களின் விற்பனை மீதான பெறுகைகள் | - | 2,790 |
| ஆதனம், பொறி மற்றும் சாதனங்களின் கொள்வனவு | (75,409) | (69,702) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(422,474,835)** | **(339,293,826)** |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| பெறப்பட்ட பங்களிப்புக்கள் | 234,388,084 | 210,582,382 |
| பொதுவான வைப்புக் கணக்கு - தொழில் திணைக்களம் | (40,331) | 76,930 |
| உறுப்பினர்களுக்கான மீளளிப்புக்கள் | (188,069,955) | (215,902,441) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட தேறிய காசு** | **46,277,798** | **(5,243,129)** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு** | **(411,426)** | **815,663** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்குச் சமமானவையும் | 5,090,384 | 4,331,447 |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும் - சீராக்கங்களின் முன்னர்** | **4,678,958** | **5,147,110** |
| சீராக்கங்கள் | | |
| ஆண்டின் இறுதியிலுள்ள காசு மீதி - தொழில் திணைக்களம் | - | (56,726) |
| **ஆண்டின் இறுதியிலுள்ள காசும் காசுக்குச் சமமானவையும் (குறிப்பு அ)** | **4,678,958** | **5,090,384** |
| **குறிப்பு அ** | | |
| திசெம்பர் 31இல் உள்ளவாறு காசு மற்றும் காசிற்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு: | | |
| கையிலுள்ள காசு | 20 | 20 |
| கொடுக்கல் வாங்கலிலுள்ள காசு | - | 10,000 |
| வங்கியிலுள்ள காசு | 4,678,938 | 5,080,364 |
| | **4,678,958** | **5,090,384** |
| பெறுமதி இழத்தலுக்கான ஏற்பாடு (-) | (271) | (381) |
| | **4,678,687** | **5,090,003** |

## ஊழியர் சேமலாப நிதியம்
## உறுப்பினர் செல்வத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் கூற்று

| விபரங்கள் | உறுப்பினார்கள் நிலுவை | கட்டட ஒதுக்கு நிதியம் | தொழில்நுட்ப மேமடபாட்டு ஒதுக்கு நிதியம் | இலாபச் சமநிலைப் படுத்தல் ஒதுக்கு நிதியம் | சந்தை தளம்பல் சமநிலைப்படுத்தல் ஒதுக்கு நிதியம் | பொதுவான ஒதுக்கு நிதியம் | பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 | ரூபா.'000 |
| **2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு நிலுவை** | **3,380,616,835** | **3,157,000** | **350,000** | **64,150,000** | | **6,650,000** | **4,937,405** | **3,459,861,240** |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் மீதான சீர்த்திருத்தப் பெறுமதி இலாபத்திற்கான சீராக்கம் | - | - | - | - | | - | 20,686,546 | 20,686,546 |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் மீதான சீர்த்திருத்தப் பெறுமதி இலாபத்தின் மீதான ஒத்திவைக்கப்பட்ட வரிக்கான சீராக்கம் | | | | | | | (2,068,655) | (2,068,655) |
| **2022 டிசெம்பர் 31இல் சீராக்கப்பட்ட நிலுவை** | **3,380,616,835** | **3,157,000** | **350,000** | **64,150,000** | **-** | **6,650,000** | **23,555,296** | **3,478,479,131** |
| 2023 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 415,905,639 | 415,905,639 |
| 2023 ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்புகள் | 519,316 | - | - | - | - | - | - | 519,316 |
| 2023 ஆம் ஆண்டிற்கான மீளளிப்புக்களில் செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (8,218,285) | (8,218,285) |
| செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி 2023 13% | 436,755,361 | - | - | - | - | - | (436,755,361) | - |
| இலாப சமநிலைப்படுத்தல் ஒதுக்கிலிருந்து பகிரத்தக்க இலாபத்திற்கான மாற்றல்கள் | - | - | - | (64,150,000) | - | - | 64,150,000 | - |
| **2023 டிசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **3,817,891,512** | **3,157,000** | **350,000** | **-** | **-** | **6,650,000** | **58,637,289** | **3,886,685,801** |
| 2024 ஆம் ஆண்டிற்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 446,926,225 | 446,926,225 |
| 2024 ஆம் ஆண்டிற்கான தேறிய பங்களிப்பு | 48,864,316 | - | - | - | - | - | - | 48,864,316 |
| 2024 ஆம் ஆண்டிற்கான மீள்நிதியிடல் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (6,997,679) | (6,997,679) |
| செலுத்தப்படத்தக்க உறுப்பினர் வட்டி (2024இல் 11%) | 422,788,621 | - | - | - | - | - | (422,788,621) | - |
| 2011இல் லா.்.ப் காஸ் பிஎல்சியின் பங்குகள் மீது செலுத்தப்பட்ட மிகை நிதியத்துடன் தொடர்புடையவற்றிலிருந்து ஆண்டுக்காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற தீர்ப்பனவுகள் | - | - | - | - | - | - | 231,000 | 231,000 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட இலாபத்திலிருந்தான சந்தை தளம்பல் சமநிலைப்படுத்தல் ஒதுக்கிற்கான மாற்றல்கள் | - | - | - | - | 42,500,000 | - | (42,500,000) | - |
| **2024 டிசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **4,289,544,449** | **3,157,000** | **350,000** | **-** | **42,500,000** | **6,650,000** | **33,508,214** | **4,375,709,663** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. கூட்டாண்மைத் தகவல்கள்

### *1.1 அறிக்கையிடுகின்ற நிறுவனம்*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் ("ஊழியர் சேமலாப நிதியம்" அல்லது "நிதியம்") என்பது இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான கட்டாயப் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். தொழில் ஆணையாளர் நிதியத்தின் பொது நிருவாகத்தராகச் செயற்படுகின்ற வேளையில், மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் நிதியத்தின் கட்டுக்காப்பாளராகச் செயற்படும் விதத்தில் அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்பாண்மைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களமானது, சட்டத்தின் மூலம் நாணயச் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கு அதற்கு வசதியளிக்கின்றது.

## 2. கணக்கீட்டிற்கான அடிப்படை

### *2.1 இணங்குவிப்புக் கூற்று*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஆக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் (இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள்) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு இணங்கிச் செல்லும் விதத்திலும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் 5(1) (ஊ) (எ) (ஏ) மற்றும் (ஐ)ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கியானது நிதியம் தொடர்பான பொதுவான கணக்கினைப் பேணுமாறும் பின்வரும் நிதியியல் கூற்றுக்களை ஆண்டுதோறும் தயாரிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

(அ) வருமானம் மற்றும் செலவினக் கூற்று,

(ஆ) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று,

(இ) பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் கூற்று, மற்றும்

(ஈ) கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதி என்பனவற்றைக் காட்டும் முதலீட்டுக் கூற்று

### *2.2 நிதியியல் கூற்றுக்களுக்கான பொறுப்பாண்மை*

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கும் சமர்ப்பிப்பதற்கும் பொறுப்பாக இருக்கின்றது.

### *2.3 இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்படும் நிதியியல் கூற்றுக்களுக்கான ஒப்புதல்*

2024 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியியல் கூற்றுக்களை 2025 மாச்சு 21ஆம் நாளன்று வெளியிடுவதற்கு ஆளும் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டது.

### *2.4 தயாரிப்பிற்கான அடிப்படை*

இலங்கை நிதியியல் அறிக்கையிடல் 09 நிதியியல் சாதனங்கள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் 26 ஓய்வுகால நன்மைத் திட்டங்களின் கணக்கீடு மற்றும் அறிக்கையிடல் என்பனவற்றின் உரிய தேவைப்பாடுகளைப் பரிசீலனையில் கொண்டு அதற்கேற்ற விதத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் அல்லது பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் அளவிடப்பட்டிருக்கின்ற நிதியியல் சொத்துக்கள் தவிர்ந்த, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவு அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

### *2.5 தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயம்*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் நிதியத்தின் தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பித்தல் நாணயமான இலங்கை ரூபாய்களில் காட்டப்படுகின்றன.

### *2.6 பொருண்மையத் தன்மையின் பயன்பாடு, எதிரீடு செய்தல் மற்றும் முழுத்தானமாக்குதல்*

#### *பொருண்மையத் தன்மை மற்றும் கூட்டுதல்*

ஒத்த விடயங்களின் ஒவ்வொரு பொருண்மைய வகுப்பும் நிதியியல் கூற்றுக்களில் தனித்தனியாகக் காட்டப்பட்டுள்ளன. வேறுபட்ட தன்மையைக் கொண்ட விடயங்கள் அல்லது தொழிற்பாடுகள், அவை பொருண்மையமற்றனவாக இருந்தாலொழிய தனித்தனியாகக் காட்டப்படுகின்றன.

#### *எதிரீடு செய்தல்*

நிதியியல் கூற்றுக்களிலுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவுகள் என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களினால் தேவைப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, எதிரீடு செய்யப்படமாட்டா.

#### *முழுத்தானமாக்குதல்*

வேறுவிதமாக எடுத்துக்காட்டப்பட்டாலன்றி, நிதியியல் கூற்றுக்களிலுள்ள எண் தொகைகள் கிட்டிய ஆயிரம் ரூபாய்களுக்கு முழுத்தானமாக்கப்படுகின்றன.

### *2.7 நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடு*

நிதியத்தின் நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது முகாமைத்துவமானது நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களை மேற்கொள்கின்றது. அது கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரயோகத்தினதும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம், செலவினங்கள் மற்றும் எதிர்பாராத பொறுப்புக்களின் வெளிப்படுத்துகை என்பனவற்றின் அறிக்கையிடப்பட்ட தொகைகளையும் பாதிக்கின்றது. நியாயப்படுத்தல்களும் மதிப்பீடுகளும்

சூழ்நிலைகளின் கீழ் நியாயமானவை என நம்பப்படும் எதிர்பார்ப்புக்கள் உட்பட, வரலாற்று ரீதியான அனுபவத்தினையும் ஏனைய காரணிகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. எனவே, உண்மையான அனுபவமும் பெறுபேறுகளும் இந்நியாயப்படுத்தல்களிலிருந்தும் மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடலாம். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தற்பொழுது இடம்பெற்றுவரும் அடிப்படையில் மீளாய்வுசெய்யப்படுவதுடன் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் சாத்தியமான அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இந்நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கையில், குறிப்பிடத்தக்களவு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் பயன்படுத்தப்பட்டிருக்குமிடத்து முகாமைத்துவம் பின்வரும் விடயங்களைப் பரிசீலனையில் கொள்கிறது.

*தொடர்ந்துசெல்லும் கரிசனைகள்*

வியாபாரம் தொடர்ந்து செல்வதற்கான இயலாற்றலை நிதியம் கொண்டிருப்பதனை முகாமைத்துவம் மதிப்பீடுசெய்திருப்பதுடன் கிட்டிய எதிர்காலத்தில் வியாபாரத்தினைத் தொடர்வதற்கான மூலவளங்களைக் கொண்டிருப்பதையிட்டும் அது திருப்தியடைந்திருக்கிறது. எனவே, நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையில் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

மேலும், குறிப்பிட்ட கணக்கீட்டு நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் என்பன பயன்படுத்தப்பட்டமைக்குப் புறம்பாக, பின்வருவன எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

- நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு
- சொத்துக்களின் பெறுமதி இழத்தல்
- சொத்துக்கள், பொறிகள் மற்றும் கருவிகளின் தேய்மானம்
- பொறுப்புக்களுக்கான ஏற்பாடு

*2.8 அறிக்கையிடும் காலத்திற்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்*

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது அறிக்கையிடும் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் பொருண்மைவாய்ந்த சம்பவங்களும் பரிசீலனையில் கொள்ளப்பட்டுள்ளன. அறியவந்த அனைத்துப் பொறுப்புக்களுக்காக ஏற்பாடுகளும் தொடர்பான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3. முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள்**

*3.1 வருமானம் மற்றும் செலவினங்களை அங்கீகரித்தல்*

வருமானம் என்பது பொருளாதார நன்மைகள் நிதியத்திற்குப் பாயக்கூடிய சாத்தியப்பாடுகளைக் கொண்ட அளவிற்கும் வருமானத்தினை நம்பகமாக அளவிடக்கூடிய அளவிற்கும் அங்கீகரிக்கப்படுகின்றது. செலவினங்களானது உறப்பட்ட செலவு மற்றும் வருமானத்தின் குறித்துரைக்கப்பட்ட விடயத்தின் வருவாய் என்பனவற்றிற்கிடையிலான நேரடித் தொடர்புகளின் அடிப்படையில் வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியத் திணைக்களத்தினாலும் தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவினாலும் நிதியத்தினை முகாமைப்படுத்துவது தொடர்பில் ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் நிதியத்தின் செலவினங்களாகக் கருதப்பட்டு அதன் மீது விதிக்கப்படுகின்றன.

### 3.1.1 வட்டி வருமானம்

பயனுறு வட்டி முறையினைப் பயன்படுத்தி அட்டுறு அடிப்படையில் அனைத்து வட்டி உழைக்கும் நிதியியல் சாதனங்களுக்குமான வட்டி வருமானம், வருமானம் மற்றும் செலவினக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வட்டி வருமானமானது நறுக்கு வட்டி வருமானம் மற்றும் நிதியியல் சாதனங்களின் கழிவிடல் அல்லது தீர்ப்பனவின் பதிவழிப்பின் மீதான இலாபம் அல்லது இழப்பு என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது.

### 3.1.2 பங்குலாபங்கள்

நிதியம் கொடுப்பனவினைப் பெறுவதற்கான உரிமை நிலைநிறுத்தப்படுகின்ற வேளையில் பங்குலாப வருமானமானது அங்கீகரிக்கப்படுகின்றது. பங்குலாப வருமானம் தேறிய ஏதேனும் அறவிடமுடியாத பிடித்துவைத்தல் வரிகளில் காட்டப்படுகின்றது.

### 3.1.3 சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்பு பெறுமதி மீதான இலாபம்

பட்டியலிடப்பட்ட பங்குகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான (சந்தைப்படியான பெறுமதி) தேறல் செய்யப்படாத இலாபங்களை இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மாற்றல்கள் உள்ளடக்குவதுடன், வருமானச் செலவினக் கூற்றில் "இலாபம் அல்லது இழப்பூடாக சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதி மீதான இலாபம் அல்லது இழப்பு" என இலாபம் அல்லது இழப்பில் காட்டப்படுகின்றன.

### *3.1.4 ஆளணிச் செலவுகள்*

ஆளணிச் செலவுகள் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களம் மற்றும் தொழில் திணைக்களத்தின் ஊ.சே. நிதியப் பிரிவு ஆகிய இரண்டினாலும் உறப்பட்ட அனைத்து அலுவலர்களுடனும் தொடர்பான செலவுகளை உள்ளடக்குகிறது. இந்நிதியமானது தனியான ஓய்வூதிய நிதியத்தினையோ அல்லது தொழிலுக்குப் பின்னரான ஏனைய நன்மைகள் திட்டத்தினையோ பேணவில்லை.

### *3.1.5 வருமான வரி*

#### 3.1.5.1 தற்போதைய வரி

தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டிற்கான தற்போதைய வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரிவிதிப்பு அறவிடுவதற்கு அல்லது அதிகாரிகளுக்கு செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகையில் கணிக்கப்படுகின்றன. தொகையினை கணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வரிவீதங்களும் வரிச் சட்டங்களும் அறிக்கையிடும் நாளன்று இயற்றப்பட்டனவாக அல்லது அதன்பின்னர் இயற்றப்பட்டனவாக இருக்கும்.

2018 ஏப்பிறல் 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வந்த 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கமைவாக, நிதியமானது 14 சதவீத வருமான வரியினைச் செலுத்த பொறுப்புடையதாகும்.

#### *3.1.5.2 பிற்போடப்பட்ட வரி*

நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை கொண்டுசெல்லும் தொகைகளுக்கும் வரிவிதிப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் தொகைகளுக்கும் இடையிலான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக பிற்போடப்பட்ட வரி அங்கீகரிக்கப்படுகின்றது.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களின் கொண்டுசெல்லும் தொகையானது ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீளாய்வுசெய்யப்பட்டு, பிற்போடப்பட்ட வரிச் சொத்தின் முழுவதையும் அல்லது பகுதியளவானதையும் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பதற்கு போதியளவு வரிவிதிக்கத்தக்க இலாபம் இனி கிடைக்காத அளவிற்கு குறைக்கப்பட்டது. அங்கீகரிக்கப்படாத பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் மீள்மதிப்பீடுசெய்யப்பட்டு, எதிர்காலத்தில் வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் பிற்போடப்பட்ட வரிச் சொத்தை மீட்டெடுப்பதற்கு அனுமதிக்கும் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றன. அறிக்கையிடல் திகதியில் குறிப்பிடத்தக்களவில் ஆக்கப்பட்ட வரி வீதங்களை அடிப்படையாகக் கொண்டு, சொத்து அடையப்பெறுகின்ற போது அல்லது பொறுப்பு தீர்ப்பனவுசெய்யப்படுகின்ற போது இவ்வரிச் சொத்துக்கள் ஆண்டுபகுதியில் பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அறிக்கையிடல் திகதியிலுள்ளவாறு நிதியம் அதன் சொத்துக்களின் அல்லது பொறுப்புக்களின் கொண்டுசெல்லும் தொகையை மீட்டெடுப்பதற்கு அல்லது தீர்ப்பனவுசெய்வதற்கு எதிர்பார்க்கும் விதத்திலிருந்து வரும் வரி விளைவுகளை பிற்போடப்பட்ட வரி அளவீடு பிரதிபலிக்கின்றது.

குறித்த பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டால் மாத்திரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களும் வரி பொறுப்புக்களும் எதிரீடுசெய்யப்படும்.

## *3.2 சொத்துக்கள்*

### 3.2.1 திட்டமிடப்பட்ட சொத்துக்கள்

நிதியத்தின் திட்டமிடப்பட்ட சொத்துக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் 26 இற்கமைவாக வகைகூறியுள்ளதுடன் நிதியத்தின் தொழிற்பாடுகளில் பயன்படுத்தப்படும் சொத்துக்கள் உள்ளடங்கலாக இலங்கை பட்டயக் கணக்காளர் 26இன் கீழ் வராத பகுதிகள் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க வகைகூறுகின்றன.

நிதியத்தின் நிலையான வருமானப் பிணையங்கள் திறைசேரி முறிகள், திறைசேரி உண்டியல்கள், நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள், தொகுதிக்கடன்கள், மற்றும் நிலையான வைப்புக்களிலுள்ள முதலீடுகளை உள்ளடக்குவதுடன் பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத உரிமை மூலதனப் பிணையங்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் 26இற்கமைவாக வகைகூறுகின்றன. எதிர்காலத்தில் எழக்கூடிய இலங்கை பட்டயக் கணக்காளர் 26இல் உள்ளடக்கப்படாத ஏதேனும் வேறு நிதியியல் முதலீடு இலங்கை நிதி அறிக்கையிடல் நிதியம் 09இன் கீழ் உள்ளடக்கப்படும்.

இதற்கமைய, இலங்கை பட்டயக் கணக்காளர் 26இற்கமைவாக, ஓய்வூதிய நன்மைத் திட்ட முதலீடுகள் நிலையான மீட்பு பெறுமதியைக் கொண்டுள்ளதும் திட்டம் மற்றும் முதலீடுகளின் கடப்பாடுகளுக்கு பொருந்துவதற்கு கையகப்படுத்தப்பட்டுள்ளதுமான முதலீடுகள் தவிர்ந்த சீர்மதிப்புப் பெறுமதியில் முன்னெடுக்கப்படும். சீர்மதிப்புப் பெறுமதி மதிப்பீடு சாத்தியமற்றபோது

இவை இடம்பெறுகின்றன. சீர்மதிப்புப் பெறுமதி மதிப்பீடு சாத்தியமற்ற நிதிய முதலீடுகள் இருக்குமிடத்தில் உரிய முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

உரிமை மூலதனப் பிணையங்கள் சீர்மதிப்புப் பெறுமதியைத் தொடர்ந்து அளவிடப்படுகின்றதுடன் நிலையான வருமானப் பிணையங்கள் முதிர்ச்சிக்கான நிலையான வருமான வீதமொன்றைக் கருத்திற்கொண்டு இறுதி மீட்பை அடிப்படையாகக் கொண்டு தொகையில் அளவிடப்படுகின்றன. நிலையான வருமானப் பிணையங்களுக்கான கொடுகடன் பெறுமதியிழப்பின் அளவீடானது மூன்று நிலை எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்பு மாதிரியை (குறிப்பு 3.2.1.2) அடிப்படையாகக் கொண்டதுடன் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படும் நிதியியல் முதலீடுகளுக்கான எந்தவொரு பெறுமதியிழப்பும் கணிக்கப்படவில்லை. முதலீடுகளின் பட்டிலிடப்படாத பங்குரிமை மூலதனங்களின் சீர்மதிப்புப் பெறுமதிக்கான சிறந்த பிரதிநிதித்துவமாக செலவு கருதப்படுகின்ற காரணத்தினால், மதிப்பீடுசெய்யப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி முதலீட்டுச்செலவை விடவும் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்துள்ளபோது பெறுமதியிழப்பு ஏற்பாடு இலங்கை கணக்கீட்டு நியமம் 36இன் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 3.2.1.1 திட்டச் சொத்துக்களை அங்கீகரித்தல் மற்றும் அங்கீகரிக்காது விடல்

சாதனத்தின் ஒப்பந்த ரீதியான ஏற்பாடுகளுக்கான ஒரு தரப்பினராக ஊழியர் சேமலாப நிதியம் மாறும்பொழுது நிதியியல் சொத்துக்கள் அல்லது நிதியியல் பொறுப்புக்கள் ஐந்தொகையில் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன்களும் பெறத்தக்கவைகளும் கடன்பாட்டாளர்களுக்கு முன்கூட்டியே காசு வழங்கப்படும் பொழுது (அல்லது தீர்ப்பனவு செய்யப்படும் போது) அங்கீகரிக்கப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்களிலிருந்தான காசுப் பாய்ச்சல்களைப் பெறுவதற்கான ஒப்பந்த ரீதியான உரிமை காலாவதியாகியிருக்கும் வேளையில் அல்லது கொடுக்கல்வாங்கலொன்றில் நிதியியல் சொத்துக்களின் காசுப்பாய்ச்சல்களைப் பெறுவதற்காக நிதியம் அதன் ஒப்பந்த ரீதியான உரிமையினை மாற்றல் செய்யும் போது நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்காதுவிடப்படுகின்றன. இதில், கணிசமாக அனைத்து இடர்நேர்வுகள் மற்றும் உரிமையாளரின் வெகுமதிகள் மாற்றியமைக்கப்படுகின்றன. ஊழியர் சேமலாப நிதியத்தினால் உருவாக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்ட மாற்றல் செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்களிலுள்ள ஏதேனும் வட்டி தனியான சொத்தாக அல்லது பொறுப்பாக அங்கீகரிக்கப்படுகிறது.

நிதியம் அதன் கடப்பாடுகளை ஆற்றும்பொழுது அல்லது ஒப்பந்தங்கள் இரத்துச்செய்யப்படும் பொழுது அல்லது காலாவதியாகும் போது நிதியியல் பொறுப்புக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றிலிருந்து அங்கீகரிக்காது விடப்படுகின்றன.

### 3.2.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதி இழப்பு

ஊழியர் சேமலாப நிதியம், சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்படாத நிதியியல் சொத்துக்களின் பின்வரும் வகைகளுக்காக எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை அளவிடுவதற்காக மூன்று கட்டங்களிலான அணுகுமுறையினை பிரயோகிக்கின்றது:

- முதிர்ச்சிக்கான வருவாயின் நிலையான வீதத்தை அனுமானிக்கும் வகையில் இறுதி பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட தொகையில் அளவிடப்பட்ட நிலையான வருமானப் பிணையங்கள்.
- கடன் கடப்பாடுகள் அத்துடன்
- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்.

உரிமை மூலதன முதலீடுகளின் மீது எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படவில்லை.

ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் ஏற்படும் மாற்றங்களின் அடிப்படையில் பின்வரும் மூன்று கட்டங்களினூடாக நிதியியல் சொத்துக்கள் மாற்றப்படுகின்றன:

கட்டம் 1: 12 - மாதங்கள் எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள்

ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லாதிருக்குமிடத்து வெளிப்படுத்தல்களும் அங்கீகரித்தலினை அடுத்து கொடுகடன் இழப்புக்களாக அங்கீகரிக்கப்பட்டவையும் ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடனின் ஒரு பகுதியும் அடுத்த 12 மாதங்களுக்குள் நிகழ்வதற்கான செலுத்தத்தவறிய நிகழ்தகவுகளுடன் இணைந்தவையாக அங்கீகரிக்கப்பட்டன.

எவருடைய கொடுகடன்கள் குறிப்பிடத்தக்களவிற்குத் தேய்வடையவில்லையோ அந்த வாடிக்கையாளர்களிடமிருந்தான 12 மாத எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் தீர்மானிக்கிறது

கட்டம் 2: ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழக்கப்படவில்லை.

வெளிப்படுத்துகைகளுக்காக ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுமிடத்து, ஆனால் கொடுகடன் பெறுமதி இழக்கப்படாதவிடத்து ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு (அதாவது நிதியியல் சொத்துக்களின் எஞ்சிய ஆயுள் காலப்பகுதி பிரதிபலிக்கப்படுகிறது) அங்கீகரிக்கப்படுகிறது.

ஊழியர் சேமலாப நிதியத்தின் கொள்கைகளுடன் இசைந்துசெல்லும் விதத்தில் BBB- இற்குக் கீழ் தரமிடப்பட்டவைகள் முதலீட்டு தரமல்லா முதலீடுகள் என பரிசீலனையில் கொள்ளப்படுவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் அத்தகைய முதலீடுகளைக் கொடுகடன் இடர்நேர்வினை இடர்நேர்வுடன் கூடிய குறிப்பிடத்தக்க தேய்வினைக் கொண்டதாக கருதுகிறது. அத்தகைய முதலீடுகள் ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு கணிப்புக்களாகக் கருத்திற் கொள்ளப்படுகிறது.

மேலும், முதலீட்டு தரத்தின் தரமிடலுக்குள்ளேயான அசைவு கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க தேய்வினை குறிப்பிடுகின்றது. குறிப்பிடத்தக்க தேய்வுகள் சாதனத்தின் உருவாக்கத்திலிருந்து இணைத்தரப்பினரின் இசைந்து வெளிவாரி கொடுகடன் தரமிடலில் இரண்டு வெட்டுப்புள்ளிக்குக் கீழான தரமிடலினூடாக அளவிடப்படுகின்றன.

நாட்டிற்கான சாதனங்களின் குறிப்பிடத்தக்க தேய்வு என்பது இணைத்தரப்பினரின் வெளிநாட்டுக் கொடுகடன் தரமிடலின் நான்கு மட்டங்களின் தரக் குறைப்பு என வரையறை செய்யப்படுகிறது.

கட்டம் 3: ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு - கொடுகடன் பெறுமதி இழப்பு

உறப்பட்ட சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களின் மீது பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கின்ற ஒன்று அல்லது கூடுதலான நிகழ்வுகளின் போது வெளிப்படுத்துகைகள் கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மதிப்பிடப்படுகின்றன. கொடுகடன் பெறுமதி இழப்புக்களாக மாறுகின்ற வெளிப்படுத்துகைகளுக்காக ஆயுட்கால எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பு அங்கீகரிக்கப்படுவதுடன், வட்டி வருமானம் மொத்த கொண்டுசெல்லல் தொகையினைவிட பதிவழிக்கப்பட்ட கிரயத்திற்கான (தேறிய ஏற்பாடுகள்) பயனுறு வட்டி வீதங்களைப் பிரயோகிப்பதன் மூலம் கணிக்கப்படுகிறது.

பெறுமதியிழத்தலுக்கான கட்டத்தினைத் தீர்மானித்தல்

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும், அறிக்கையிடுகின்ற நாளுக்கும் ஆரம்ப அங்கீகரிப்பு நாளுக்குமிடையில், எதிர்பார்க்கப்படும் ஆயுள் காலத்தின் போது நிகழ்கின்ற செலுத்தத்தவறும் இடர்நேர்வுகளுடன் ஒப்பிடுவதன் மூலமான ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் வெளிப்படுத்துகைகளுக்கான கொடுகடன் இடர்நேர்வில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்கள் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் மதிப்பீடுகளை மேற்கொள்கிறது. ஊழியர் சேமலாப நிதியம் தொடர்பானது; இந்நோக்கத்திற்காக நியாயமற்ற செலவுகள் அல்லது இந்நோக்கத்திற்கான முயற்சிகளும் இல்லாமல் கிடைக்கின்ற நியாயமானதும் ஆதரவாக இருக்கத்தக்கதுமான தகவல்களைப் பரிசீலனையில் கொள்கிறது. இது கணியம்சார் மற்றும் தரம்சார் தகவல்களையும் அத்துடன் முன்னோக்கிய பகுப்பாய்வுகளையும் உள்ளடக்குகிறது.

நிதியமானது வெளிப்படுத்துகை ஒன்றின் மீதான கொடுகடன் இடர்நேர்வு தனிப்பட்ட அல்லது ஒன்றுசேர்ந்த அடிப்படையில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்துள்ளதா என்பதனை மதிப்பிடுகின்றது. பெறுமதி இழப்பின் ஒன்றுசேர்ந்த மதிப்பீட்டு நோக்கத்திற்காக, நிதியியல் சாதனங்கள் அவற்றின் வகை, கொடுகடன் இடர்நேர்வுத் தரமிடல், ஆரம்ப அங்கீகரிப்பின் திகதி, முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலம், கடன்பாட்டாளரின் கைத்தொழில் மற்றும் ஏனைய தொடர்பான காரணிகள் என்பனவற்றினைக் கருத்திற்கொண்டு பகிரப்பட்ட கொடுகடன் இடர்நேர்வுப் பண்புகளின் அடிப்படையில் தொகுதிகளாக்கப்படுகின்றன.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்களின் அளவிடல்

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்புக்கள் எதிர்பார்க்கப்பட்ட இழப்பின் பக்கச்சார்பற்ற மற்றும் நிகழ்தகவுத்தன்மை கொண்ட - நிறையேற்றப்பட்ட மதிப்பீடுகளிலிருந்து பெறப்படுவதுடன் பின்வருமாறு அளவிடப்படுகின்றன:

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்: நிதியியல் சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட ஆயுள் காலத்தில் அனைத்து காசுப் பற்றாக்குறைகளினதும் பெறுமதி தற்போதுள்ளவாறு பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்படுகின்றது. காசுப் பற்றாக்குறை என்பது ஒப்பந்தத்தின்படி ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய காசுப்பாய்ச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற காசுப் பாய்ச்சலுக்குமிடையிலான வேறுபாடாகும்.

- அறிக்கையிடுகின்ற நாளன்று கொடுகடன் பெறுமதி இழக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள்: மொத்தமாக கொண்டு செல்லப்படும் தொகைக்கு மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் தற்போதைய பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாக பயனுறு வட்டி வீதத்தினால் கழிவிடப்பட்ட தொகை.

- எடுப்பனவு செய்யப்படாத கடன்கடப்பாடுகள்: கடப்பாடுகள் எடுப்பனவு செய்யப்படாதிருக்குமாயின் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வரவேண்டிய ஒப்பந்த ரீதியான காசுப் பாய்ச்சலுக்கும் ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைக்குமிடையிலான வேறுபாடுகளின் தற்போதைய பெறுமதி.

- நிதியியல் உத்தரவாத ஒப்பந்தங்கள்: ஊழியர் சேமலாப நிதியம் பெறுவதற்கு எதிர்பார்க்கும் ஏதேனும் தொகையினைக் கழித்து உடமையாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற கொடுப்பனவுகள்.

முன்னோக்கிய தகவல்களைப் பயன்படுத்துவது உட்பட, எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பினை ஊழியர் சேமலாப நிதியம் எவ்வாறு கணிக்கிறது என்பது மீதான மேலதிக தகவல்களுக்கு குறிப்பு 30இலுள்ள நிதியியல் சொத்துக்கள் பிரிவின் கொடுகடன் தரத்தினைப் பார்க்கவும்.

எதிர்பார்க்கப்பட்ட கொடுகடன் இழப்பானது, இலாபம் மற்றும் இழப்பினூடாக ஐயத்திற்குரிய படுகடன் கணக்கிற்கான ஏற்பாடுகளைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்டது. ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்ட தொடர்பான தொகையுடன் ஊழியர் சேமலாப நிதியம் இலாபம் மற்றும் இழப்பீட்டிலுள்ள ஒதுக்கல் கட்டணத்தினை அங்கீகரித்ததுடன் ஐந்தொகையிலுள்ள சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் குறைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2.1.3 எதிரீடு செய்தல்

தொகையுடன் ஊழியர் சேமலாப நிதியம் இலாபம் மற்றும் இழப்பீட்டிலுள்ள ஒதுக்கல் கட்டணத்தினை அங்கீகரித்ததுடன் ஐந்தொகையிலுள்ள சொத்துக்களின் கொண்டு செல்லப்படும் தொகையில் குறைப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2.1.4 முக்கியமான கணக்கீட்டு எடுகோள்களும் மதிப்பீடுகளும்

ஒவ்வொரு அறிக்கையிடும் நாளன்றும் செய்யப்படுகின்ற எடுகோள்கள் அத்திகதியிலுள்ளவாறான மிகச்சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. மதிப்பீடுகள் நம்பகரமான முறையில் அளவிடப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளைக் கொண்டிருக்கின்ற போதும் உண்மையான தொகை இம்மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். மதிப்பீடுகளும் அடிப்படை எடுகோள்களும் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள் மதிப்பீடுகள் திருத்தப்படும் காலத்திலும் ஏதேனும் எதிர்கால நடவடிக்கைகளில் போதுமான காலப்பகுதியில் அங்கீகரிக்கப்படுகின்றன.

நியாயப்படுத்தல்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற மிக உணர்வுபூர்வமான கணக்கீட்டுக் கொள்கைகள் கீழே குறித்துரைக்கப்பட்டுகின்றன.

சீர்மதிப்புப் பெறுமதிகளின் அளவிடல்

சீர்மதிப்புப் பெறுமதி என்பது, அளவிடப்படுகின்ற திகதியில் சந்தைப் பங்கேற்பாளர்களிடையே இடம்பெறுகின்ற ஒழுங்கான கொடுக்கல்வாங்கலொன்றில் சொத்தொன்றினை விற்பனை செய்வதற்காக பெறப்படக்கூடிய விலை அல்லது பொறுப்புக்களை மாற்றல் செய்வதற்கான கொடுப்பனவாகும்.

நிதியியல் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களை வகைப்படுத்துமிடத்து பெறுபேறுகள் சீர்மதிப்புப் பெறுமதியில் அளவிடப்பட்டுவருவதுடன் சாத்தியமானவிடத்து சீர்மதிப்புப் பெறுமதி குறிப்பிடப்பட்ட குறிப்பீடுகள் தொடர்பான விடயங்கள் மூலம் அல்லது ஊழியர் சேமலாப நிதியம் உடனடியாக அணுகக்கூடிய மிக அனுகூலமான திரவச்சந்தையின் வழங்கல் விலைகளின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது. கொடுகடன் இடர்நேர்விற்கான சீராக்கமும் பொருத்தமான விதத்தில் சீர்மதிப்புப் பெறுமதியில் உள்ளடக்கப்படுகின்றன.

தேறிய திறந்த நிலைமைக்கான சீர்மதிப்புப் பெறுமதி என்பது தீவிரமான சந்தையொன்றில் குறிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் பொறுப்பொன்றில் நடைமுறை வழங்கல் விலையாகவும் நிதியியல் சொத்துக்களுக்கான குறிப்பீட்டு விலையாகவும் இருப்பதுடன் வழங்குவதற்காக அல்லது வைத்திருக்கப்படுவதற்கான சாதனத்தின் கூறுகளது எண்ணிக்கையினால் பெருக்கப்படுகிறது.

குறிப்பிட்ட சொத்து அல்லது பொறுப்புக்கு தீவிரமான சந்தைகள் இல்லாதவிடத்து, ஊழியர் சேமலாப நிதியமானது சீர்மதிப்புப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு, அண்மைய நடுநிலையான கிட்டுமான கொடுக்கல்வாங்கல்கள், கழிவுசெய்யப்பட்ட காசுப்பாய்ச்சல் பகுப்பாய்வுகள், தேர்வு விலையிடல் மாதிரிகள் மற்றும் ஏனைய மதிப்பிடல் உத்திகள் என்பனவற்றில் பெறப்பட்ட கொடுக்கல்வாங்கல் விலைகள் உட்பட, பெறுமதி மதிப்பீட்டு உத்திகளை சந்தை நிலைமைகள் மற்றும் அறிக்கையிடும் நாளில் காணப்பட்ட இடர்நேர்வு என்பனவற்றின் அடிப்படையில் பெற்றுக்கொண்டது. அவ்வாறு செய்யும் போது, சீர்மதிப்புப் பெறுமதியானது, அவதானிக்கத்தக்க சந்தை உள்ளீடுகளின் உயர்ந்தபட்ச பயன்பாட்டினை உருவாக்குகின்ற மதிப்பீட்டு உத்திகளினதும் குறித்துரைக்கப்படும் குறைந்தபட்ச நம்பகத்தன்மையினைப் பயன்படுத்துவதன் மூலமும் மதிப்பிடப்படுகிறது.

எவ்வாறாயினும், குறிப்பு 15.2இல் விளக்கப்பட்டதற்கமைவாக, பட்டியலிடப்படாத உரிமை மூலதனங்கள் போதுமானளவிற்கு கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டதுடன் மதிப்பீட்டு உத்திகளைப் பயன்படுத்தி நம்பகமான சீர்மதிப்புப் பெறுமதியை அளவிடுவதற்கு அண்மைய தகவல்கள் கிடைக்கக்கூடியதாக இல்லை. மேலும், மதிப்பிடப்பட்ட பட்டியலிடப்படாத உரிமை மூலதன முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் குறிப்பு 31இல் காட்டப்பட்டுள்ளன.

### 3.2.2 ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள்

*அங்கீகரித்தல்*

சொத்துக்களுடன் இணைந்த எதிர்காலப் பொருளாதார நன்மைகள் நிதியத்திற்கு பாயக்கூடிய தன்மையும் சொத்துக்களின் செலவினை நம்பகமாக அளவிடக்கூடிய சாத்தியமும் காணப்படுமிடத்து ஆதனம், பொறி மற்றும் சாதனம் அங்கீகரிக்கப்படுகின்றன

*அளவிடுதல்*

அனைத்து ஆதனம், பொறி மற்றும் சாதனம் ஆரம்பத்தில் அவற்றின் கிரயத்தில் அளவிடப்படுகின்றன. கிரயமானது சொத்துக்களின் கொள்வனவு மற்றும் அதன் பின்னரான செலவினையும் ("பின்னரான செலவுகளின்" கீழ் விளக்கப்பட்டவாறு) நேரடியான காரணங்களினால் ஏற்படும் செலவினத்தையும் உள்ளடக்குகிறது. தொடர்பான சாதனங்களின் தொழிற்பாடுகளின் இன்றியமையாத விடயமான மென்பொருளின் கொள்வனவு சாதனங்களின் ஒரு பகுதியாகக் காட்டப்பட்டிருக்கிறது.

*செலவு மாதிரி*

| **நிலையான வருமானப் பிணையங்கள்** | | | | | | | | | | | | | | | | | | | | |
| திறைசேரி முறி | 166 | 122,426 | 253,021 | 435,008 | 344,271 | 272,524 | 396,567 | 340,414 | 510,375 | 317,860 | 314,234 | 205,724 | 216,339 | 213,986 | 14,090 | 29,240 | 92,354 | 5,469 | - | 4,084,070 |
| கூட்டாண்மைத் தொகுதிக் கடன் | 7,835 | 4,095 | - | 1,025 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 12,955 |
| திறைசேரி உண்டியல்கள் | 69,195 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 69,195 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 34,177 | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 34,177 |
| ஏனைய முதலீடு | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - |
| பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | | | | | | | | | | | | | | | | | | | | |
| - பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 148,250 | 148,250 |
| - பட்டியலிடப்படாத உரிமை மூலதனம் | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | - | 45,172 | 45,172 |
| முழு மொத்தம் | **111,373** | **126,521** | **253,021** | **436,034** | **344,271** | **272,524** | **396,567** | **340,414** | **510,375** | **317,860** | **314,234** | **205,724** | **216,339** | **213,986** | **14,090** | **29,240** | **92,354** | **5,469** | **193,421** | **4,393,818** |

| | |
|---|---|
| பதிவழிக்கப்பட்ட கிரயத்தில் படுகடன் பிணையங்கள் மீதான பெறுமதி இழப்பிற்கான ஏற்பாடு | (1) |
| **பெறுமதி இழப்பு நீங்கலான சொத்துப்பட்டியல் பெறுமதி** | **4,393,817** |

# ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

### 33 ஒப்பீட்டு ரீதியான தகவல்கள்

இலங்கை கணக்கீட்டு நியமத்தின் படியான பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதன சாதனங்களின் நிதிய முதலீடுகள் சீர்மதிப்பு பெறுமதியில் பதிவுசெய்யப்பட்ட முதலீடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. தொடர்புபட்ட வருடத்தின் இறுதி வேலை நாளில் உள்ளவாறு கொழும்பு பங்கு பரிவர்த்தனையால் வெளியிடப்பட்ட சந்தை விலை அடிப்படையிலான பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் சீர்மதிப்பு பெறுமதியினை நிதியம் நிர்ணயித்து, முதலீடுகள் சீர்மதிப்புப் பெறுமதியில் பதியப்பட்டதோடு வருமானக் கூற்றில் சந்தை பெறுமதி மாற்றங்கள் சீர்மதிப்பு பெறுமதியிலான நிதியியல் சாதனங்களின் மீதான தேறிய இலாபமாக.'. (நட்டமாக) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், போதுமான மற்றும் ஒப்பீட்டளவிலான சந்தை தகவல்கள் கிடைக்காமையினால், பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனங்களின் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதி குறைந்தளவு நம்பகத்தன்மையுடன் காணப்படுவதாக கருத்தப்பட்டதோடு, மேலும் 2023.12.31ஆம் திகதி வரை நிதியம் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் கிரயத்தை சீர்மதிப்புப் பெறுமதியாக கருதியதுடன் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்புப் பெறுமதிகள் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட்டன.

குறிப்பு 15.3இல் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி, வெஸ்ட் கோஸ்ட் (பிறைவேட்) லிமிடெட்டில் 2024ஆம் ஆண்டிலிருந்தான முதலீகள், மதிப்பீட்டு உத்தியில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக ஏற்கனவே பதிவுசெய்யப்பட்ட கிரயத்திற்கு பதிலாக மதிப்பிடப்பட்ட சீர்மதிப்பு பெறுமதியில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. மதிப்பீட்டில் ஏற்பட்ட இம்மாற்றமானது, முன்னைய ஆண்டுகளில் பதிவுசெய்யப்பட்ட சொத்துக்கள் மற்றும் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களுக்கான பொருட்களில் தாக்கமொன்றினை கொண்டிருக்கின்றது. இதனடிப்படையில், பட்டியலிடப்படாத மூலதன பங்குரிமை சாதனங்கள் மற்றும் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்களின் முதலீடுகள் கொண்டுசெல்லல் பெறுமதிக்கு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஒப்பீட்டு ரீதியான நிதியியல் கூற்றுக்களின் நிரல்படுத்தப்பட்ட வகைகள் மீதான தாக்கங்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

### 33.1 2023.12.31முடிவடையும் ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்றின் மீளிணக்கம்

| *31 திசெம்பர் முடிவடையும் ஆண்டிற்கானது* | மீளிணக்கத் திற்கான குறிப்புக்கள் | 2023 (அறிக்கையிடப் பட்டவாறு) ரூ.'000 | கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் ரூ.'000 | 2023 (திருத்தப்பட்ட ஒப்பீடுகள்) Rs.'000 |
|---|---|---|---|---|
| வட்டி வருமானம் | | 442,419,326 | - | 442,419,326 |
| பங்குலாப வருமானம் | | 2,997,302 | - | 2,997,302 |
| சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறிய வருமானம் / (இழப்பு) | A | 23,835,878 | 11,846,761 | 35,682,639 |
| நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பின் கூடிய/(குறைந்த) ஏற்பாடு | | 4,036 | - | 4,036 |
| **முதலீட்டு வருமானம்** | | **469,256,542** | **11,846,761** | **481,103,303** |
| ஏனைய வருமானம் | | 241,106 | - | 241,106 |
| **மொத்த வருமானம்** | | **469,497,648** | **11,846,761** | **481,344,408** |
| தொழிற்பாட்டுச் செலவினங்கள் | | (2,304,699) | - | (2,304,699) |
| **வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் /(நட்டம்)** | | 467,192,949 | 11,846,761 | 479,039,710 |
| வரிச் செலவினம் | B | (61,949,395) | (1,184,676) | (63,134,071) |
| **ஆண்டிற்கான இலாபம்/(நட்டம்)** | | **405,243,554** | **10,662,085** | **415,905,639** |

**குறிப்பு அ**

**சீர்மதிப்புப் பெறுமதியில் நிதியியல் சாதனங்கள் மீதான தேறிய இலாபம்.'.(நட்டம்)**

மதிப்பிடப்பட்ட பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதன முதலீடுகளின் சீர்மதிப்புப் பெறுமதிகள் அங்கீகரிக்கப்பட்டதன் மீதான பெறுகை, 2023 ஆண்டிற்கான வருமானத்திற்கமைவாக அடையாளப்படுத்தப்பட்டு சீராக்கம் செய்யப்பட்டது.

| | ரூ.'000 |
|---|---|
| 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதி | 35,508,307 |
| 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு சீர்மதிப்புப் பெறுமதி | 23,661,546 |
| சீர்மதிப்புப் பெறுமதியின் அதிகரிப்பு | **11,846,761** |

# ஊழியர் சேமலாப நிதியம்
# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**ஒப்பீட்டுத் தகவல்கள் (தொடர்ச்சி...)**

**32.2 2023.12.31இல் முடிவடையும் ஆண்டுக்கான நிதியியல் நிலைமை கூற்றின் மீளிணக்கம்**

**குறிப்பு ஆ**

**வரிச் செலவு**

பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதன கருவிகளின் இலாபத்தின் சீர்மதிப்பு மீதான ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புகளின் ஏற்பாடுகளுக்கான ஒத்திவைக்கப்பட்ட வரிச் செலவுகள் 2023 வரி செலவுக்கு சீராக்கப்படுகின்றது.

| | ரூ.'000 |
|---|---|
| 2023 திசெம்பர் 31இல் உள்ளவாறு பிற்போடப்பட்ட வட்டி பொறுப்புக்கள் | 3,253,331 |
| 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு பிற்போடப்பட்ட வட்டி பொறுப்புக்கள் | 2,068,655 |
| ஆண்டுக்காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்ட **பொறுப்புக்கள்** | **1,184,676** |

| 31 திசெம்பர் முடிவடையும் ஆண்டிற்கானது | மீளிணக்கத் திற்கான குறிப்புக்கள் | ”2023 (அறிக்கையிடப் பட்டவாறு)” ரூ.'000 | கொள்கை மாற்றத்தின் தாக்கங்கள் ரூ.'000 | ”2023 (திருத்தப்பட்ட ஒப்பீடுகள்)” ரூ.'000 |
|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் சாதனம் | | 382,512 | - | 382,512 |
| தொழிற்பாட்டிலுள்ள மூலதன வேலைகள் | | 297,885 | - | 297,885 |
| அருவச் சொத்துக்கள் | | 5,696 | - | 5,696 |
| பங்குரிமை மூலதனப் பிணையங்கள் | C | 105,517,309 | 32,533,307 | 138,050,616 |
| நிலையான வருமானப் பிணையங்கள் | | 3,762,097,038 | - | 3,762,097,038 |
| கையிருப்புக்கள் | | 22,683 | - | 22,683 |
| பெறத்தக்க வட்டி | | 70,000 | - | 70,000 |
| பெறத்தக்க பங்களிப்புக்கள் | | 18,600,000 | - | 18,600,000 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | | 3,036,457 | - | 3,036,457 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | | 5,090,003 | - | 5,090,003 |
| | | **3,895,119,583** | **32,533,307** | **3,927,652,890** |
| **பொறுப்புக்கள்** | | | | |
| செலுத்தத்தக்க கணக்குகள் | | 4,870 | - | 4,870 |
| ஒன்றுசேர்ந்த செலவினங்கள் | | 773,093 | - | 773,093 |
| பிற்போடப்பட்ட வட்டி பொறுப்புக்கள் | D | - | 3,253,331 | 3,253,331 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | | 36,935,795 | - | 36,935,795 |
| | | **37,713,758** | **3,253,331** | **40,967,089** |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **3,857,405,825** | **29,279,977** | **3,886,685,801** |
| உறுப்பினர் நிலுவைகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டவை | | 3,817,891,512 | - | 3,817,891,512 |
| | | **3,817,891,512** | **-** | **3,817,891,512** |
| ஒதுக்குகள் | | **10,157,000** | **-** | **10,157,000** |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | E | **29,357,313** | **29,279,977** | **58,637,290** |
| | | **39,514,313** | **29,279,977** | **68,794,290** |
| **நிதியத்தின் மொத்த தேறிய பெறுமதி** | | **3,857,405,825** | **29,279,977** | **3,886,685,801** |

## ஊழியர் சேமலாப நிதியம்
## நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

**ஒப்பீட்டுத் தகவல்கள் (தொடர்ச்சி...)**

**33.2 2023.12.31 முடிவடையும் ஆண்டிற்கான நிதியியல் நிலைமைக் கூற்றின் மீளிணக்கம்**

**குறிப்பு இ**

**படுகடன் பிணையங்கள்**

வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவெட்) லிமிடட் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்பு பெறுமதி பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதன கருவிகளின் ஏட்டுப் பெறுமதியாக எடுக்கப்படுகின்றது.

| | 2023 (அறிக்கை யிடப்பட்டவாறு) ரூ.'000 | மதிப்பீட்டு மாற்றத்தின் தாக்கங்கள் ரூ.'000 |
|---|---|---|
| பட்டியலிடப்பட்ட பங்குரிமை மூலதனம் | 96,376,320 | - |
| பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் | 9,140,989 | 32,533,307 |
| | **105,517,309** | **32,533,307** |

**குறிப்பு ஈ**

| **பிற்போடப்பட்ட வட்டி பொறுப்புக்கள்** | தற்காலிக வித்தியாசம் ரூ.'000 | வரி வீதம் ரூ.'000 |
|---|---|---|
| 2023இற்கான பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனத்தின் மீதான சீர்மதிப்புப் பெறுமதி | 32,533,307 | 3,253,331 |

**குறிப்பு உ**

ஒத்திவைக்கப்பட்ட வரி பொறுப்புகள் நீங்கலான 2023.12.31 இல் உள்ளவாறான பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதன கருவிகளுக்கான மதிப்பிடப்பட்ட சீர்மதிப்பு பெறுமதியை ஒருங்கிணைப்பதன் மீதான இலாபம் பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் கொண்டுசெல்லும் பெறுமதிக்கு சீராக்கப்பட்டது. இலாபம் மதிப்பிடப்பட்ட சீர்மதிப்பு பெறுமதிக்கும் பட்டியலிடப்படாத மூலதன பங்குரிமையின் ஏட்டுப்பெறுமதியாக பதிவுசெய்யப்பட்ட கிரயத்திற்குமிடையிலான வித்தியாசமாகும்.

**34 ஈடுபாடுகள்**

**திறைசேரி முறிகளை 2024.12.30 மற்றும் 2024.12.31 ஆம் திகதிகளில் ரூ.28,555,164,389.06 தொகையை கொண்ட திறைசரி முறிகளை நிதியம் கொள்வனவுசெய்துள்ளது இது 2024.01.01 மற்றும் 2025.01.02 ஆம் திகதிகளில் தீர்ப்பனவுசெய்யப்படவுள்ளது.**

பிரிவு ஈ

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



**பொறுப்புத்துறப்பு:** கணக்காய்வாளர் நாயகத்தின் மூல அறிக்கை சிங்கள மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்டுள்ளதுடன் ஊழியர் சேமலாப நிதியத்தின் ஆண்டறிக்கை 2024இனை வெளியிடுவதற்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் இவ் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது

தொழில் ஆணையாளர் நாயகம்,
தொழில் திணைக்களம்.

அத்தியட்சகர்,
ஊழியர் சேமலாப நிதியம்.

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் மற்றும் ஏனைய சட்டத்துடனான ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை

---

1. நிதிக்கூற்றுகள்

1.1. முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
----------------------------------------

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, உறுப்பினர்களின் தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, அளவு ரீதியான கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்பான தகவல்களையும் நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகளையும் உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கமைவாக எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதியத்தின் நிதிக்கூற்றுகளின் ஊடாக 2024 திசெம்பர் 31 ஆந்

திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு தர நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2. முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---------------------------------------------------------------------------------------------------

(அ) மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கான மொத்த மதிப்பான ரூபா 4,289,544 மில்லியனில் ரூபா 91,943 மில்லியன் பல்வேறு காரணங்களினால் ஒவ்வொரு ஊழியர் கணக்குகளுக்கு பற்று வைக்கப்படாமல் இருந்தது. அவை தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் செய்யப்படுகின்றன.

(i) உறுப்பினர் நிதியத்திலுள்ள தொழில் ஆணையாளர் கணக்கில், தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ததன் மூலம் அறவிட்டுக்கொள்ளப்பட்டிருந்த தொகையில் மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இலங்கை மத்திய வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 13,393 மில்லியன் தொகையும், அவ்வாறு வழக்குத் தாக்கல் செய்ததன் மூலம் அறவிட்டுக்கொண்டு தீர்க்கப்படும் வரை தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 388 மில்லியன் தொகையும் பல்வேறு காரணிகள் காரணமாக அந்தந்த உறுப்பினர் கணக்குகளில் பற்று வைக்காது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. தீர்க்கப்படவிருக்கும் மீதியில் 57% வீதம் 2 வருடங்களையும் தாண்டிய மீதியாகும். மேலும், தொழில் திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்கில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அறவிட்டுக்கொள்ளப்படுகின்ற பிற இழப்பீட்டுத் தொகைகள் ஊழியர் சேமலாப நிதிய கணக்குகளிலிருந்து ஒரு அகற்றி கணக்குப் பதிவதற்கான முறையொன்று காணப்படவில்லை.

(ii) தொழில் தருநர்களின் பெயரில் தனித் தனியாக பேணிச் செல்லப்படுகின்ற “நடப்பு வருடத்திற்கான பங்களிப்புத் தொகைப் பணம் இல. 01” எனும் பெயரிலான கணக்கில் மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதி காணப்பட்ட ரூபா 74,849 மில்லியன் மீதி சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு பகிரப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்வேறு காரணிகள் காரணமாக உறுப்பினர்களுக்கு செலுத்தப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பயன்கள் மற்றும் உரிமை கோரிக்கை முன்வைக்கப்படாத பயன்களாக மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 1,074 மில்லியனும், குறை அல்லது மேலதிக பங்களிப்புத் தொகையாக ரூபா 2,753 மில்லியனும், குறை அல்லது மேலதிக பயன்கொடுப்பனவாக ரூபா 514 மில்லியனும் உறுப்பினர் நிதியத்தின் கீழ் தொடர்ந்தும் தீர்க்கப்பட இருந்தது.

(ஆ) மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாரான நிதிக் கூற்றுகளுக்கு அமைய, நிதியத்தின் உறுப்பினர் கணக்கு மற்றும் 5 உப கணக்குகளின் மீதிகளின் கூட்டுத் தொகையிலும், உறுப்பினர் தனிக் கணக்குகளின் கூட்டுத் தொகையிலும் ரூ 15,477 மில்லியன் இனங் காணப்படாத வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(இ) 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட 09 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளுக்கு அமைய, கீழ்க் காட்டப்பட்டுள்ளவாறு 2001 தொடக்கம் 2024 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதிக்குரியதாக தீர்க்கப்படாத ரூபா 3,900 மில்லியன் நிலுவை மீதி காணப்பட்டது. இதில் ரூபா 1,581 மில்லியன் 2025 சனவரி மாதமாகும் போது கூட தீர்க்கப்படாது வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.

(i) 2018 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்து இருந்து வருகின்ற, வழங்கப்பட்ட எனினும் மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியான ருபா 2 மில்லியன் தொகை 2025 சனவரி மாதமாகும் போது கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2025 சனவரி 31 ஆம் திகதிக்கு வங்கிக் கூற்றுகளில் பதியப்படாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 68 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2018 வருடத்திற்கு முன்பிலிருந்து இருந்து வருகின்ற மீதியாகும். மேலும், இம் மீதியில் காசேட்டில் பதியப்படாத வழங்கப்பட்ட SLIPS ஆக ரூபா 3,844 மில்லியனையும், வங்கிக் கூற்றுகளில் பதியப்படாத வழங்கப்பட்ட SLIPS ஆக ரூபா 3,835 மில்லியனையும் ஒன்றுக்கொன்று சரியீடு செய்து, ரூபா 10 மில்லியன்

தொகை SLIPS விநியோகம் - கணக்கிணக்கம் செய்யப்படாத (SLIPS Issued-Unreconciled) என குறிப்பு இடப்பட்டிருந்தன.

(iii) 2025 சனவரி 31 ஆம் திகதிக்கு காசேட்டில் பதியப்படாத நானாவித கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 573 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இதில் ரூபா 341 மில்லியன் 2024 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்தே இருந்து வருகின்ற காசேட்டில் பதியப்படாத மதிப்பிழந்த மீதியாகும். இதில் 2018 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்தே இருந்து வருகின்ற காசேட்டில் பதியப்படாத மறுக்கப்பட்ட slips ஆக ரூபா 32 மில்லியனும், வங்கிக் கூற்றில் பதியப்படாத மறுக்கப்பட்ட SLIPS ஆக 02 மில்லியனும் ஒன்றுக்கொன்று சரியீடு செய்யப்பட்டு மறுக்கப்பட்ட slips - கணக்கிணக்கம் செய்யப்படாது (slips returns unreconciled) ரூபா 30 மில்லியன் மீதியாக காட்டப்பட்டிருந்தது.

(iv) 2025 சனவரி 31 ஆம் திகதிக்கு நேரடி பற்றாக / வரவாக ரூபா 229 மில்லியன் வங்கிக் கணக்கிணக்க கூற்றுகளில் காணப்பட்டதுடன், இது இனங் காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இதில் 2018 ஆம் வருடத்திற்கு முன்பிலிருந்து இருந்து வருகின்ற ரூபா 214 மில்லியன் மீதியொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டது. மேலும், இம் மீதி வங்கிக் கூற்றில் அடையாளம் காணப்படாத நேரடி பற்று ரூபா 1,465 மில்லியனும் காசேட்டில் பதிவு செய்யப்படாத ஏனைய கொடுக்கல் வாங்கல்கள் ரூபா 1257 மில்லியனும் ஒன்றுக்கொண்டு ஈடு செய்யப்பட்டு காட்டப்பட்டிருந்தது.

(v) பயன்பாட்டிலுள்ள கணினி கணக்கீட்டு மென்பொருள் முறைமையிலுள்ள ஒரு குறைபாட்டின் காரணமாக 2006 ஆண்டிலிருந்து முன் கொண்டு வரப்பட்ட ரூபா 141 மில்லியன் பற்று மீதி 2024 ஆம் ஆண்டிலும் கூட தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vi) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில், வைப்பிலிடப்பட்ட போதிலும் தேறாத ரூ. 366 மில்லியன் காசு சமர்ப்பிக்கப்படாத ரூ.27 மில்லியன் காசோலை அத்துடன் விநியோகிக்கப்பட்ட போதிலும் சமர்ப்பிக்கப்படாத ரூ.70 மில்லியன் காசோலைகள் காணப்பட்டதுடன், இவை காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(vii) 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு, காசேட்டில் பிழையாக ரூபா 268,910 கூட்டப்பட்டிருந்தது.

(viii) 2024 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிக்கு, ரூபா. 105 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத காசோலை விநியோகங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இம் மீதியானது முரண்பாடுகளை வெளிப்படுத்தும் வங்கிக் கூற்றில் பதிவுசெய்யப்பட்ட ஆனால் காசேட்டில் பதிவுசெய்யப்படாத ரூபா.147 மில்லியன் காசோலை விநியோகங்கள், மற்றும் காசேட்டில் பதிவுசெய்யப்பட்ட ஆனால் வங்கிக் கூற்றில் பதிவுசெய்யப்படாத ரூபா. 42 மில்லியன் காசோலை விநியோகங்கள் ஆகியவற்றை உள்ளடக்கும். இந்த ரூபா 105 மில்லியன் கணக்கிணக்கம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்களும் 2018 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே முன் கொண்டுவரப்பட்ட மீதியாகும்.

(ix) தீர்க்கப்படாத வங்கிக் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்காக 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆம் திகதி தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளப்பட்டது. அதற்கமைய ஒப்பந்தத் திகதியிலிருந்து 8 வாரங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்தபோதிலும், கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் அறிக்கையிடும் திகதியன்று முழுமையாக பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2020 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிக்கு, ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகையில் 50 சதவீதம், அதாவது ரூபா 1.5 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதிப் பிரிவுடன் தொடர்புடைய ரூபா 1,169 மில்லியன் நிலையான சொத்துக்கள் 2024 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆம் திகதிக்கு காணப்பட்ட போதிலும், தொழில் திணைக்களத்திலிருந்து தனித்தனியாக இச் சொத்துக்களின் உரிமை மற்றும் இருப்பு ஆகியவற்றை உறுதிசெய்கின்ற முறையாக இலக்கமிடப்பட்ட நிலையான சொத்து பதிவேட்டொன்று பேணிச் செல்லப்படவில்லை. மேலும், சிகாஸ் கணக்கீட்டு மென்பொருளிலும் இச் சொத்துக்களின் உட்சேர்க்கை இற்றைப்படுத்தப்பட்டு பூர்த்திசெய்யப்படவில்லை. இதன் விளைவாக, நிதியத்திற்குரிய சொத்துக்களை தனித்தனியாக அடையாளங்காண்பது சாத்தியமற்றதாகக் காணப்பட்டது.

(உ) மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு தொழில் திணைக்களத்துடன் தொடர்புடைய 05 நிலையான சொத்து தொகுதிகளுக்கான ஆகு செலவு நிதி நிலைமைக் கூற்றில் ரூபா. 1,102 மில்லியனாகக் காணப்பட்டபோதிலும், பெறுமானத் தேய்வு ஒதுக்கத்திற்கான அட்டவணைக்கு அமைவாக ஆகு செலவானது ரூபா 754 மில்லியனாகும். ஆகையால், நிதி நிலைமைக்கூற்று மற்றும் தேய்மான அட்டவணைக்கிடையிலான நிலையான சொத்து ஆகு செலவில் ரூபா 348 மில்லியன் வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்திக்கமைய, நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பயனுள்ள ஆயுட் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு வருடத்தின் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிதிக் கூற்றுக்களுக்காக பயன்படுத்தப்பட்ட தேய்மான அட்டவணையின் பிரகாரம், தொழில் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதிப்பிரிவு ஆகியவற்றுடன் தொடர்புடைய முழுமையாக தேய்மானம் செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி முறையே ரூபா. 696 மில்லியன் மற்றும் ரூபா.160 மில்லியன் ஆகும். இச் சொத்துக்களில், சில சொத்துக்கள் தற்போதும் பயன்பாட்டில் உள்ளன, ஆனால் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க மீளாய்வு செய்யப்படவில்லை, இதன் விளைவாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இற்கிணங்க சரிசெய்யப்படாத மதிப்பீட்டு வழு ஒன்று ஏற்பட்டது. மேலும், பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத சொத்துக்களை முறையாக பொறுப்பு நீக்கம் செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) நிதியக் கொள்கைக்கு அமைவாக, மீளாய்வு வருடத்தின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இயந்திரோபகரணங்களுக்கு வருடாந்தம் 25% வீதத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்படல் வேண்டும். இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டிற்கான தேய்மான கணக்கீட்டில் 12.5% வீதம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் விளைவாக, 2024 ஆம் ஆண்டில் ரூபா 34,774,794 ஆகு செலவான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கான தேய்மான மதிப்பு ரூபா 4,346,849 ஆல் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) நிதியக் கணக்கீட்டுக் கொள்கையின் படி, மோட்டார் வாகனங்கள் வருடாந்தம் எளிய முறையில் 20% ஆல் தேய்மானம் செய்யப்படுதல் வேண்டும். 2024 ஆம் ஆண்டின் டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு, நிதிக் கூற்றுக்களின் படி தொழில் திணைக்களத்திற்குரிய மோட்டார் வாகனங்களின் ஆகு செலவு ரூபா 97 மில்லியன் எனக் காட்டுகிறது. இருப்பினும், கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில், 2012 ஆம் ஆண்டிற்குப் பின் எந்தவொரு மோட்டார் வாகனங்களும்

கொள்வனவு செய்யப்படவில்லை. அதற்கிணங்க, நிதிக் கூற்றுத் திகதிக்கு, வாகனங்கள் முழுமையாக தேய்மானம் செய்யப்பட்டிருக்க வேண்டியதோடு தேறிய ஏட்டு பெறுமதி பூச்சியமாக இருத்தல் வேண்டும். எவ்வாறிருப்பினும், ரூபா. 41 மில்லியன் செலவினத்தையுடைய வாகனங்களுக்கு தேய்மானம் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை. கடந்த ஆண்டிலும் இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டபோதிலும், இது இன்னும் சரிசெய்யப்படவில்லை. மேலும், சிகாஸ் கணினி மென்பொருளுக்கிணங்க, நிதியம் தற்போது ரூபா.75 மில்லியன் மொத்த மதிப்புடைய 23 மோட்டார் வாகனங்களை சொந்தமாகக் கொண்டுள்ளதுடன் ரூபா.22 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்படுகின்றது.

(ஐ) ஊழியர் சேமலாப நிதியத்தின் கணக்கீட்டுக் கொள்கைக்கு அமைய, கணினி மென்பொருட்கள் எளிய முறையைப் பயன்படுத்தி வருடாந்தம் 33.33% இல் தேய்மானம் செய்யப்படல் வேண்டும். இருப்பினும், 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 24 ஆம் திகதியன்று ரூபா.1,040,000 மதிப்பில் கொள்வனவு செய்யப்பட்ட கணினி மென்பொருளுக்கான தேய்மானம் ரூபா 173,420 ஆல் குறைவாக பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஒ) 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,163,600 பெறுமதியான கணினி மென்பொருட்கள் நிலையான சொத்து தேய்மான அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இக் கொள்வனவுகள் சார்பில் தேய்மானமாக மீளாய்வு ஆண்டிற்காக ரூபா 721,200 வும், 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 721,200 வும், 2022 ஆம் ஆண்டிற்காக ரூபா 68,750 வும் கணக்குப் பதியப்பட்டிருக்கவில்லை. முன்னைய ஆண்டிலும் இவ் விடயம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தபோதிலும், இன்றுவரை சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) “மெஹெவர பியச” என்றழைக்கப்படுகின்ற செயற்பணி இல்லம் கட்டத் தொகுதியின் உள்ளக நிர்மாணங்’களை அமைக்கும் முற்றுப்பெறாத வேலைகள் கணக்கில் காட்டப்பட்டுள்ள ரூபா 298 மில்லியன் மீதியானது அலுவலகப் பொருந்திகளாக மூலதனமயப்படுத்தப்பட்டு, அதற்கமைய பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட் வேண்டியிருந்தபோதிலும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஔ) நிதிக் கூற்றுக்களுக்கும், திறைசேரி கணினி அறிக்கைக்கும் அமைய தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியத்தின் வரவுப் பெறுமதியில் ரூபா 2 மில்லியன் வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(க) நிதி நிலைமைக் கூற்றுக்கிணங்க, தொழில் ஆணையாளர் கட்டு நிதிக் கணக்கிலிருந்து முன்பணக் கொடுப்பனவாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 518 மில்லியன் மீதி ஒரு வருடத்திற்கும் கூடுதலான காலம் இருந்து வந்துள்ளது. இதற்காக தொழில் ஆணையாளரின் பதிலுக்கமைய, ஊழியர் சேமலாப நிதிக் கணக்கிலுள்ள பொது வைப்புக் கணக்குகளைத் தீர்ப்பதற்காக வங்கிக் கணக்குகளில் இன்னும் பெறப்படாத ரூபா 388 மில்லியன் திறைசேரி கட்டுநிதி மற்றும் வருட இறுதியில் மத்திய வங்கியினால் பொது திறைசேரிக்கு மீள்செலுத்தப்பட்ட ரூபா 130 மில்லியன் என்பனவும் இதில் அடங்கும். மத்திய வங்கியால் மீளளிக்கப்பட்டு பொதுத் திறைசேரிக்கு செலுத்தப்பட்ட செலவினங்கள் நி.ஒ 107 (அ) இன் கீழ் தொடர்புடைய செலவினத் தலைப்பில் அறவிடப்பட வேண்டும் என இருந்தபோதிலும், ஊழியர் நஷ்டஈட்டு நிதியின் முன்பணக் கொடுப்பனவாக சொத்துக்களின் கீழ் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக நிதியத்தின் சொத்துக்கள் ரூபா. 129 மில்லியனாக மிகைப்படுத்தப்பட்டு காட்டிருந்தன.

கணக்காய்வானது, இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கிணங்க மேற்கொள்ளப்பட்டது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழ், எனது பொறுப்பானது இவ் அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பிரிவின் கீழ் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்காக ஓர் அடிப்படை வழங்குவதற்காக என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதுமானது என்றும் பொருத்தமானது என்றும் நான் நம்புகின்றேன்.

### 1.3. நிதியத்தின் 2024 ஆம் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்

இக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட நிதியத்தின் 2024 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள எனினும், நிதிக் கூற்றுகள் மற்றும் அது தொடர்பான எனது கணக்காய்வு அறிக்கையில் அடங்காத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்று பொருட்படும். இந்த ஏனைய தகவல்களின் பொருட்டு முகாமைத்துவம் பொறுப்புக் கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது அபிப்பிராயத்தில் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது தொடர்பாக எந்தவொரு வகையிலுமான சான்றுப்படுத்தலையோ அல்லது அபிப்பிராயத்தையோ தெரிவிக்கமாட்டேன்.

நிதிக் கூற்றுகள் தொடர்பான எனது கணக்காய்விற்குரியதாக, என்னுடைய பொறுப்பு யாதெனில், மேற்படி அடையாளம் காணப்பட்ட ஏனைய தகவல்களை பெற்றுக்கொள்ள முடியுமானவிடத்து, வாசித்தல் மற்றும் அவ்வாறு மேற்கொள்கையில் ஏனைய தகவல்களை நிதிக் கூற்றுகளுடனோ அல்லது கணக்காய்விலோ வேறு வகையில் பெற்றுக்கொண்ட எனது அறிவுக்கமைவாக பொருண்மையாக பொருந்தவில்லையா என்பதை கவனத்தில் கொள்வதாகும்.

இக் கணக்காய்வு அறிக்கைத் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக்கொண்ட ஏனைய தகவல்கள் மீதும், நான் மேற்கொண்ட பணிகளை அடிப்படையாகக்கொண்டும், இந்த ஏனைய தகவல்கள் பொருண்மயாக தவறாக காண்பிக்கப்பட்டுள்ளதாக நான் தீர்மானித்தால், அந்த விடயங்கள் என்னால் அறிக்கையிடப்படுதல் வேண்டும். இது தொடர்பாக எனக்கு அறிக்கையிடுவதற்கு எதுவுமில்லை.

## 1.4. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

-------------------------------------------

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையில் கணக்குப் பதிதல் மற்றும் நிதியத்தின் தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவளுடன் தொடர்புடைய விடயங்கள் வெளிப்படுத்துவது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரீட்சிக்கும் பொறுப்பை, நிருவகிக்கும் தரப்பு கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உட்பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிதியம், அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பதிவேடுகளையும் அறிக்கைகளையும் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் போது பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும்; பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள் தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்தின்; ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக நிருவகிக்கும் தரப்புகளை தெளிவூட்டுகின்றேன்.

## 2. பிற சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கமைவாக, எனது அறிக்கையின் “முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை” பகுதியில் நான் விவரித்த விடயங்களில் விளைவைத் தவிர, கணக்காய்விற்கு தேவையான எல்லா தகவல்களும் தெளிவுபடுத்தல்களும் என்னால் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், எனது பரிசோதனையில் அறிய வருகின்ற வகையில் உரிய முறையான நிதி அறிக்கைகள் நிதியத்தால் பேணிச் செல்லப்பட்டிருந்தது.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளன.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, கடந்த ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.2. கடைபிடிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட சாட்சிகள் மீது, அளவு ரீதியிலான விடயங்களுக்கு வரையறைக்குட்படுத்தியதால், பின்வரும் வெளிப்படுதல்களை மேற்கொள்ளும் அளவிற்கு எதுவும் எனது கவனத்திற்கு உட்படவில்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையின் எவரேனுமோர் உறுப்பினர் நிதியத்துடன் தொடர்புகொண்டு ஏதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பொதுவான வணிகப் போக்கிற்கு அப்பாற்பட்டு தொடர்பொன்று உள்ளதென்பது.

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, கீழ் காட்டப்பட்டுள்ள அவதானிப்புகள் நீங்களாக ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காதவாறு நிறுவனம் செயற்பட்டுள்ளது என்பது.

| | சட்டதிட்டங்கள் / ஏற்பாடுகளுக்கான குறிப்பீடு | | ஏற்புடையதாகாமை |
|---|---|---|---|
| (அ) | 1999 பெப்ருவரி 11 ஆம் திகதிய 01/99 ஆம் இலக்க தொழில் திணைக்கள | (i) | 2022 ஆம் ஆண்டிலிருந்து 2024 ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ஜா எல மாவட்ட தொழில் அலுவலகத்தில் நிறுவன பரீட்சித்தல்களை மேற்கொண்டு, |

சுற்றறிக்கை

மிகைக் கட்டணத்தையும் பங்களிப்புத் தொகையையும் அறவிடுவதற்கான முதலாவது அறிவிப்பை விடுத்து இறுதி அறிவிப்பை அனுப்புவதற்கு, 22 நாட்கள் தொடக்கம் 1,250 நாட்கள் வரையிலான, காலங்கடந்திருந்த 101 சந்தர்ப்பங்களுக்குரிய, தொழில் தருநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா. 142,822,152 நிலுவைப் பங்களிப்புக் தொகையும் தொடர்புடைய மிகைக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

அதேபோல், இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகம் தொடர்பாக 21 நாட்கள் தொடக்கம் 406 நாட்கள் வரையிலான, காலங்கடந்திருந்த 111 சந்தர்ப்பங்களுக்குரிய, தொழில் தருநரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 66,455,624 ரூபா, நிலுவைப் பங்களிப்புக் தொகையும் தொடர்புடைய மிகைக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ii) மிகைக் கட்டணத்தையும் பங்களிப்புக் தொகையையும் அறவிடுவதற்கான முதலாவது அறிவிப்பை விடுத்திருந்த போதிலும், இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலகத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா. 7,518,257 வுக்கு 32 சந்தர்ப்பங்களுக்கும், மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தினால் அறவிடப்பட வேண்டிய ரூபா. 79,229,959 வுக்கு 15 சந்தர்ப்பங்களிலும் இறுதி

அறிவித்தல் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2000 பெப்ருவரி மாதம் 10 ஆம் திகதிய 06/2000 ஆம் இலக்க தொழில் திணைக்கள சுற்றறிக்கையின் 1 (IV) ஆம் பிரிவு | (i) | நிதியத்தின் கண்காணிப்பு தரவு முறைமைக்கு அமைய, 2024 செப்டெம்பர் 20 ஆம் திகதியில், ஜா எல மாவட்ட தொழில் அலுவலக ஆளுகைப் பிரதேசத்தில் 5199 இயங்கு நிலையிலுள்ள நிறுவனங்களும், 1159 இயங்கா நிலையிலுள்ள / மூடப்பட்ட நிறுவனங்களும் அதேபோன்று இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலக ஆளுகைப் பிரதேசத்தில் 4322 இயங்கு நிலையிலுள்ள நிறுவனங்களும், 851 இயங்கா நிலையிலுள்ள / மூடப்பட்ட நிறுவனங்களும் காணப்பட்டன. நீண்ட காலமாக பரீட்சித்தலுக்கு உட்படுத்தப்படாத நிறுவனங்களை பரீட்சித்தலுக்கு தெரிவு செய்வது அவசியமென சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2015 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட திகதி வரை, மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுள் முறையே 1093 நிறுவனங்களும் 1166 நிறுவனங்களும் மாத்திரமே பரீட்சிக்கப்பட்டிருந்தது. முழு நிறுவன எண்ணிக்கையில் 84% மற்றும் 78% வீதமான நிறுவனங்களுக்கான பரீட்சித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுள் |

ஜா எல வலயத்திற்குரிய 150 நிறுவனங்கள் உப வலயங்களுக்கும் தொழில் உத்தியோகத்தர்களுக்கும் பகிரப்பட்டிருக்கவில்லை. அதனால் அந் நிறுவனங்கள் தொடர்பாக மேற்பார்வைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, நிதியத்தின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றியில்லாமை என்பது,

| **தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கான குறிப்பீடு** | | **ஏற்புடையதாகாமை** |
|---|---|---|
| 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 15 ஆம் பிரிவு | (i) | ஏதேனுமொரு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு உரிய பங்களிப்புத் தொகையை ஒவ்வொரு மாதமும் முடிவுற்று ஆரம்பமாகும் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன், நிதியத்திற்கு அனுப்புதல் வேண்டுமெனினும், ஜா எல, இரத்தினபுரி மற்றும் மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலக ஆளுகைப் பிரதேசத்திற்குரிய பதிவு செய்யப்பட்ட, முறையே 1104, 631 மற்றும் 6 நிறுவனங்கள், மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குரிய பதிவு செய்யப்பட்ட திகதியிலிருந்து பங்களிப்புத் தொகைகளை செலுத்தியிருக்கவில்லை. மேலும், இது தொடர்பில் பின்னூட்டல் விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

(ii) ஜா எல மற்றும் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலக ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களுள் முறையே 1,924 மற்றும் 1,689 நிறுவனங்கள், 2005 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நிதியத்திற்குப் பங்பளிப்புத் தொகையை செலுத்தாத (அவ்வப்போது பங்பளிப்புத் தொகையை செலுத்திய) நிறுவனங்களாக இனங்காணப்பட்டதோடு, அந் நிறுவனங்கள் உரிய நேரத்தில் தொழில் உத்தியோகத்தர்களினால் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் படி, பின்வரும் அவதானிப்புகள் தவிர்ந்த நிதியத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், விளைவுப் பெருக்கத்துடனும் உரிய காலப்பகுதிக்குள் ஏற்புடைய சட்டத்திட்டங்களுக்கு இணங்கியொழுகி கொள்வனவு செய்து பயன்படுத்தியில்லை என்பது.

(அ) மீளாய்வு ஆண்டில், தொழில் திணைக்களம் ஊழியர் சேமலாப நிதித் திட்டத்தின் கீழ் 19 மீளெழும் செலவின விடயங்களுக்காகவும் 07 மூலதன செலவின விடயங்களுக்காகவும் முறையே ரூபா 869 மில்லியனையும் ரூபா 612 மில்லியனையும், அத்துடன் தகவல் தொழில்நுட்ப முறைமைகளை மேம்படுத்தும் திட்டத்திற்காக ரூபா 100 மில்லியனையும் ஒதுக்கீடு செய்திருந்தது. இருந்தபோதிலும் மீளாய்வு வருடத்தின் இறுதியில் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 172 மில்லியன் அதாவது 24% வீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், ரூபா 532 மில்லியன் அதாவது 76% வீதம் பயன்படுத்தப்படாமல் இருந்தது.

(ஆ) நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட ஹோட்டல் கட்டடத் தொகுதிக்காக 2013 ஆம் ஆண்டில் பட்டியற்படுத்தப்படாத கம்பனிகளின் பங்குகளாக ரூபா 5,000 மில்லியன் முதலீடு செய்யப்பட்டிருந்தது. முதலீடு செய்து 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், அந்த ஹோட்டல் கட்டடத் தொகுதியை கட்டும்

நடவடிக்கைகள் நிர்மாணிக்கும் பணிகள் இது வரை ஆரம்பிக்கப்படாத காரணத்தினால், முதலீட்டால் எந்தவொரு பயனும் நிதியத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) பட்டியற்படுத்தப்பட்ட 16 நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 20,765 மில்லியன் சாதாரண பங்கு முதலீட்டுக்குரியதாக 2024 ஆம் ஆண்டிலும் சாதாரண மதிப்பு குறைவு காரணமாக ரூபா 5,884 மில்லியன் மூலதன இழப்பு ஏற்பட்டிருந்தது.

(ஈ) எரிவாயு கம்பனியில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 459 மில்லியன் சாதாரண மதிப்பு 2003 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு ரூபா 433 மில்லியனுக்கு குறைத்திருந்ததோடு, 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அச் சாதாரண மதிப்பு தொடர்ந்தும் ரூபா 357 மில்லியனுக்கு குறைந்திருந்தது. அதற்கமைய அக் கம்பனியில் செய்யப்பட்ட முதலீடு காரணமாக ஏற்பட்டுள்ள மூலதன இழப்பு ரூபா 102 மில்லியனாக இருந்தது.

(உ) நிதியத்தில் 2024 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 68 பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 88,374 மில்லியன் முதலீட்டில், 9 பட்டியற்படுத்தப்பட்ட கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 6,936 மில்லியன் சாதாரண பங்கு முதலீடுகளுக்காக 2019 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வு வருடம் வரை பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. மேலும், பட்டியற்படுத்தப்பட்ட 22 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 19,970 மில்லியன் சாதாரண பங்கு முதலீடுகளுக்காக 2024 ஆம் ஆண்டிலும் கூட பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வு வருடத்தில் டோனர் கொள்முதல் செய்யப்பட்ட போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

I. 2006 கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 3.4.3 (அ) மற்றும் (ஆ) பிரவுகளின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது தொலைபேசி விபரக்கொத்து மஞ்சள் பக்கங்களில் மற்றும் ரேன்போ பக்கங்களில் பதிவுசெய்துகொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படல் வேண்டும். இருந்தபோதிலும் ரூபா 12 மில்லியன் பெறுமதியான டோனர் கொள்வனவின் போது விலைமனுக்களைக் கோருவதற்கான வழங்குநர்களை தெரிவு செய்த முறையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

II. 2006 கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 3.5 மற்றும் 3.6 (இ) ii ஆம் பிரிவுகளின் பிரகாரம், 2024 ஆம் ஆண்டில் டோனர் கொள்வனவின் போது, அவற்றைப் பயன்படுத்தும் அச்சு இயந்திரங்களின் சேவை ஒப்பந்த நிபந்தனைகளுக்கு இணங்கி, அதற்குரிய டோனர் உற்பத்திகளின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர் நிறுவனங்களிடமிருந்து நேரடி முறையின் கீழ் டோனர்களை கொள்வனவு செய்வதற்கு விலைமனுக்களை கோருவதற்கு முடியுமாக இருந்தபோதிலும், கொள்முதல் செயன்முறையின் போது அதிகாரமளிக்கப்பட்ட அம் முகவர் நிறுவனங்கள் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

III. 2006 கொள்முதல் வழிகாட்டல் கோவையின் 5.3.2. மற்றும் 5.3.4. (ஆ) பிரிவுகளின் பிரகாரம், பெறுமதி சேர் வரியின் (VAT) படி பதிவுசெய்யப்பட்ட சான்றிதழின் பிரதியொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இருந்தபோதிலும், 2024 ஆம் ஆண்டில், பெறுமதி சேர் வரிக்காக பதிவுசெய்யப்படாத வழங்குநர்கள் இருவரிடமிருந்து 06 வகைகளுக்குரிய 550 டோனர் அலகுகள் 7,507,500 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், உற்பத்தியாளரிடமிருந்து முறையான அதிகாரத்தை வழங்குநர்கள் பெற்றுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்தாமல் 2024 ஆம் ஆண்டில் அத்தகைய உற்பத்தியாளரின் அதிகாரத்தைப் பெற்றிராத 03 வழங்குநர்களிடமிருந்து 04 வகைகளிக்குரிய 225 டோனர் அலகுகள் 2,702,500 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

IV. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் படி, தாய்க் கம்பனியால் தயாரிக்கப்பட்ட டோனர் மாதிரிகளை சமர்ப்பித்துள்ளதாக ஒரு குறிப்பிடப்பட்ட தனியார் நிறுவனமொன்றிடமிருந்து, ஒரு டோனர் ரூபா 14,000 வீதப்படி 125 டோனர்களை ரூபா 1,750,000 தொகைக்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், தாய்க் கம்பனியால் தயாரிக்கப்பட்ட டோனர்கள் என்பதைப் பரீட்சித்த தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 ஏனைய விடயங்கள்

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் மேற்பார்வை தரவு முறைமைக்கு அமைய, குறிப்பிடப்படுகின்ற ஜா-எல மற்றும் இரத்தினபுரி மாவட்ட தொழில் அலுவலக ஆளுகைப் பிரதேசத்திற்குட்பட்ட நிறுவனங்களில், தொழிற்படாத மற்றும்

மூடப்பட்ட 42 மற்றும் 23 நிறுவனங்கள், ஊழியர்களின் பிரதிநிதியாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைக்கு பங்களிப்புத் தொகையை தொடர்ந்து செலுத்தியிருந்தபோதிலும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கு எந்தவொரு பங்களிப்புத் தொகையையும் செலுத்தியிருக்கவில்லை. அவர்களின் வியாபார நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் பின்னனியில் அந் நிறுவனங்களிடமிருந்து ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவுசெய்த ஒவ்வொரு சேவை வழங்குநர் நிறுவனமும், முறையான மேற்பார்வைக்காக மாவட்ட தொழில் அலுவலமொன்றிற்கும் தொழில் உத்தியோகத்தரொருவருக்கும் ஒதுக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனினும், 2024 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் திகதி ஊழியர் சேமலாப நிதியத்தின் மேற்பார்வை தரவு முறைமைக்கு அமைய தொழில் திணைக்களத்தின் 24 வலயங்களுக்குரியதாக நிதியத்தில் பதிவு செய்துகொண்டுள்ள 81,987 இற்கும் தொழில்தருநர் நிறுவனங்கள் உப வலயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. அவற்றுள் 76,306 நிறுவனங்கள் இயங்கும் நிலையிலுள்ள நிறுவனங்கள் என்பதும், 7,335 நிறுவனங்கள் செயலற்ற நிறுவனங்கள் என்பதும் அவதானிக்கப்பட்டன. அவ் இயங்கும் நிலையிலுள்ள நிறுவனங்களில் 631 நிறுவனங்களுக்கு மாத்திரம் தொழில் உத்தியோகத்தர்கள் பெயரிடப்பட்டிருந்தபோதிலும், 75,675 நிறுவனங்களுக்கு எந்தவொரு தொழில் உத்தியோகத்தரும் நியமிக்கப்படாததின் காரணமாக, அந் நிறுவனங்கள் தொடர்பில் எந்தவொரு மேற்பார்வையும் இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(இ) 2024 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு, ஊழியர் சேமலாப நிதியத்தில் பதிவு செய்துகொள்ளாமல், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவுசெய்துகொண்டுள்ள தொழில் தருநர்களின் எண்ணிக்கை 22,764 ஆகக் காணப்பட்டது. அத் தொழில் தருநர்களிடமிருந்து அத்திகத்திக்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கு கிடைக்கப் பெற்றிருந்த பங்களிப்புத் தொகைகளின் கூட்டு மொத்தம் ரூபா 505 மில்லியனாகக் காணப்பட்டது. அந் நிறுவனங்களுள் 1க்கும் 10க்கும் இடைப்பட்ட ஊழியர்கள் உள்ள நிறுவனங்கள் 22,246 ஆகக் காணப்பட்டதோடு, 10க்கும் 254க்கும் இடைப்பட்ட ஊழியர்கள் உள்ள நிறுவனங்கள் 518 ஆகக் காணப்பட்டது. அதற்கமைய, அத் தொழில் தருநர்களுள் நிதியத்தில் பதிவு செய்துகொள்ளப்பட வேண்டிய எனினும், பதிவு செய்துகொள்ளாமல் தட்டிக்கழித்துள்ள தொழில் தருநர்களை இனங்கண்டு, அத் தொழில் தருநர்களை நிதியத்தில் பதிவு

செய்வதற்கு சபையுடன் ஒருங்கிணைப்புகளை மேற்கொண்டு பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2024 ஆம் ஆண்டு நிதி நிலைமைக் கூற்றில், இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவிற்குரியதாக முன் செலுத்தப்பட்ட கட்டணங்களின் கீழ், முதலீட்டு முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு மென்பொருள் வழங்கல், விநியோகம், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரிப்பு என்பவற்றுக்காக 2019 ஆம் ஆண்டில் முன்பணமாக ரூபா 02 மில்லியன் தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தபோதிலும், இத் திட்டம் 2024 ஆம் ஆண்டாகும் போது கூட இயங்கும் நிலையில் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2010 ஆம் ஆண்டில் விமான நிறுவனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 500 மில்லியன் முதலீட்டுக்கு, எந்தவொரு வருமானமும் இதுவரை நிதியத்திற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(ஊ) 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி தனியார் நிறுவனமொன்றின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்த காரணத்தினால் ரூபா 205 மில்லியனை நிதியத்திற்கு இழக்க நேரிட்டிருந்தது.

ஜீ.எச்.டீ. தர்மபால
கணக்காய்வாளர் தலைமையதிபதி (ப.க.)